UNIVERSITY LIBRARY 30 MAR 2001 PERIODICALS DIVISION

REGISTERED AS A CATHOLIC WEEKLY. (P.197) Established 19 Feb. 1876

# பாதுகாவலன்

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வாரஏடு PATHUKAVALAN

மலர் 125
இதழ் 8
விலை ரூபா 5
பங்குனி 15
2001
பக்கம் 10

## வன்னிக்கான பொருளாதாரத் தடையை நல்லெண்ண நடவடிக்கையாக நீக்கவும்!

அண்மையில் யாழ். ஆயர் இலங்கை ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் வன்னிக்கான பொருளாதாரத் தடையை உடனடியாக நீக்கும்படி வேண்டுகோள் விடுத்தார்.

நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்கெய்முக்கும் இலங்கை இராணுவ பொறுப்பதிகாரி லெப். ஜெனரல் பலகல்லவுக்கும் பிரதிகள் அனுப் பப்பட்ட யாழ். ஆயருடைய கடிதத்தின் சாராம்சம் பின்வருமாறு,

*ஜனாதிபதி அவர்களே சமாதானத்துக்கும் பேச்சுவார்த்தைக்குமான முன் முயற் சிகளில் தாங்கள் ஈடுபட்டுள்ள முக்கியமான இந்த நேரத்தில் தங்களது கவனத்திற்கு இவ் வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.*

*1995ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ம் திகதி தாங்கள் வர்த்தமானி அறிவிப்பு மூலம் கொண்டுவந்த இந்தப் பொருளாதரத் தடையும் அதனை பாதுகாப்புப் பிரிவினர் நடைமுறைப்படுத்திய விதமும் கடந்த பல வருடங்களாக வன்னி வாழ் மக்கள் மீது*

(கடைசிப் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளை மேற்கொள்ள மடுப்பகுதியை யுத்த சூனிய பிரதேசமாக்கவும்

இன்றைய நிலைமையில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடாத்தவும் சமாதான முயற்சிகளை மேற்கொள்ளவும் மடுப்பகுதியே உரிய இட மாகும். தென்பகுதியிலிருந்து வருவோரும் சமாதான முயற்சிகளை மேற்கொள்வோரும் மடுப் பகுதிக்கே வருகைதரக்கூடிய தாக இருக்கிறது. இலங்கை வாழ் மக்கள் எல்லோரும் மடு பதியிலேயே இனமத பேத மற்றவர்களாக ஒன்றுகூடி அன் பையும் நட்பையும் பகிர்ந்து கொண்டுள்ளார்கள். இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை யின் தேசிய நிகழ்வான மடு அன்னையின் சமாதானப் பவனி இந் நாட்டிலே அமைதியையும் சமாதானத்தையும் கொண்டுவர இருக்கிறது. இவை எல்லாவற் றையும் கவனத்திற் கொண்டு மடுப்பகுதியை யுத்தமற்ற சமா தானப் பிரதேசமாக பிர்கடனம்செய்யுமாறு யாழ். ஆயர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தார்.

யாழ். ஆயரின் இவ் வேண்டுகோளை செவிமடுத்த ஜனா திபதி நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

# யுத்தத்தினால் தீர்வு எதனையும் அடையமுடியாது யுத்தத்தை தொடர வேண்டாம்

# பேச்சுகளை உடன் ஆரம்பியுங்கள்

## வடபகுதி மக்களின் விருப்பம் இதுவே ஜனாதிபதியிடம் யாழ். ஆயர்





**யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை 07.03.2001 அன்று ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து இன்றைய நிலைமை பற்றியும் யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தைய ஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும் கலந்துரையாடினார்.**

**வடபகுதி வாழ் தமிழ் மக்களின் துன்ப துயரங்களை தெளிவாக ஜனாதிபதியிடம் விளக்கிய யாழ். ஆயர் யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானம் மலர வேண்டும் என்பதையே வடபகுதி மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள் எனத் தெரிவித்தார்.**

தமிழீழ விடுதலைப் புலி கள் அமைப்பின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் உட்பட பல முக்கியஸ்தர் களை சந்தித்த போது பேச்சு வார்த்தைகளுக்கு முக்கியத் துவம் கொடுக்கும்படி அவர்க ளிடம் தாம் விடுத்த கோரிக் கையை ஜனாதிபதியிடம் தெளிவு படுத்திய யாழ். ஆயர் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்ப டுத்தி இந் நாட்டையும் மக்களையும் அழிவி லிருந்து காப்பாற்ற ஜனாதிபதி முன்வர வேண்டுமென வேண்டு கோள் விடுத்தார்.

முடிவற்ற இந்த யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவர நோர்வே நாட்டு விசேட தூதர் எரிக் சொல்கெய்ம் மூலம் விடு தலைப் புலிகளுடன் பேச நட வடிக்கை எடுத்துள்ளோம். மிக விரைவில் இந்தப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுமென நான் உறுதியாக நம்புகிறேன். என ஜனாதிபதி பதிலளித்தார்.

யாழ்ப்பாண மக்களைப் பொறுத்தவரையில் கடந்த ஆண்டு பெரும் துன்ப துயரங் களை அனுபவித்த ஆண்டா கும். ஆயர் இல்லம் வரை ஷெல்கள் வெடித்துச் சிதறின. மக்கள் இடம்பெயர்ந்து ஓடினார்

(கடைசிபக்கம் பார்க்கவும்)

## ஜனாதிபதி யாழ். ஆயரிடம் கேட்ட உதவி!

அண்மையில் கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமார துங்கவை தனிமையில் சந்தித்தார். 40நிமிட நேரம் நீடித்த மேற்படி சந்திப்பின் இறுதியில் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஜனாதிபதியிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டபோது தமது கதிரையிலி ருந்து எழும்பிய ஜனாதிபதி ஆயருக்கு அண்மையில் வந்து *ஆயர் அவர்களே, தயவுசெய்து எனக்காக இறைவனிடம் மன்றாடுங்கள். இனப்பிரச்சினைக்கான தீர் வில் ஓர் நல்லமுடிவினைக் காண வேண்டிக் கொள்ளுங்கள்* என்று அன்பாக வேண்டிக் கொண்டார்.

## பேராயர் மார்செலோ சாகோ அ.ம.தி மரணம்!

மறைபரப்பு சபையின் உயர் செயலாளராக (**Secretary General of the Propaganda Fide**) பணியாற்றிய பேரருள் திரு மார்சலியோ சாகோ அ.ம.தி அண்மையில் இரத்தப் புற்றுநோயனால் காலமானார்.

அமலமரித் தியாகிகள் சபையின் உயர்தலைவராக இரு தடவைகள் இவர் சிறப்புப் பணியாற் றியுள்ளார். 1998ம் ஆண்டு மறைபரப்பு சபையின் உயர் செயலாளராக நியமனம் பெற்ற இவர் அமல மரித் தியாகிகளின் 150வது ஆண்டு நிறைவுவிழாக் கொண்டாட்டங்களை சிறப்பிக்க யாழ். நகர் வருகை தந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண மக்கள், மறை மாவட்ட அமல்மரித் தியாகி களைப் பொறுத்தவரையில் இவரின் மறைவு ஒரு பேரிழப் பாகும்.

## மடுஅன்னையின் சமாதான பவனி

## சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தேசிய நிகழ்வு 14இல் ஆரம்பம்

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையினால் தேசிய ரீதியில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள மருமதடு அன்னையின் சமா தானப் பவனி ஒருமாத ஆயத் தத்தின் பின்னர் மார்ச் 14ம் திகதி ஆரம்பமாகி யது.

கொழும்பு மறைமாவட்டப் பேராயர் நீக்களஸ் மார்க்கஸ் ஆண்டகையால் வழங்கப்பட்ட விசேட வாகனத்தில் குண்டு துளைக்காத கண்ணாடிப் பேழையில் அலங்காரம் செய்யப்பட்ட மருதமடு அன்னையின் திரு சொரூபப் பவனி மடுவிலிருந்து செட்டிக்குளம் மதவாச்சி ஊடாக முதலில் அனுராதபுரம் மறை மாவட்டத்தை சென்றடையும். ஒருநாள் மட்டும் அனுராத புரத்தில் தங்கியிருக்கும் மடு அன்னையின் திருசொரூபம் 15ம் திகதி சிலாபம் மறைமாவட்ட ஆயரிடம் கையளிக்கப்படும்.

சிலாபத்திலே 18ம் திகதி வரை வைத்திருக்கப்படும் அன் னையின் சொரூபம் புத்தளம், தலைவில்லு, சிலாபம், வென்னப் புவ ஆகிய பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்படும்.

19ம் திகதி கொழும்பு மறை மாவட்ட பேராயர் நீக்களஸ் மார்க்கஸ் பெர்ணான்டோ ஆண் டகையிடம் மடு அன்னையின் சொரூபம் கையளிக்கப்படும். நீர்கொழும்பு, வேதத்தை, கொட்டாஞ்சேனை புதிய லூசியாஸ் பேராலயம் மொறட்டுவ ஆகிய இடங்களுக்கு எடுத்துச் செல் லப்படும் மடு அன்னையின் சொரூபம் 26ம் திகதி குருணாகல் மறைமாவட்ட ஆயரிடம் கைய ளிக்கப்படும். 28ம் திகதி வரை குருணாகல் மறைமாவட்டத்தில் இருக்கும் அன்னையின் சொரூ பம் 29ம் திகதி முதல் ஏப்ரல் முதலாம் திகதி வரை கண்டி மறைமாவட்டத்தில் சமாதானப் பவனியை மேற் கொள்ளும்.

ஏப்ரல் 2ம் திததி மடுவுக்கு வரும் மருதமடு அன்னையின் திருசொரூபம் யாழ். மறை மாவட்டத்தின் கிளி.-முல்லை. மறைக்கோட்டத்தில் 4நாள் சமாதான பவனியை மேற் கொள்ளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். திருச்சபையும் சமாதானமும்

சிங்கள மக்களையும் தமிழ் மக்களையும் கத்தோலிக்கர்கள் என்ற ரீதியில் இணைத்து வைத்திருக்கின்ற ஒரு அரிய வாய்ப்பினை இலங்கை கத்தோலிக்க திருச்சபை கொண்டுள்ளமையால் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் கத்தோலிக்க திருச்சபைக்கு ஒரு பாரிய பொறுப்பு உண்டு.

தமிழ்– சிங்களம் என்ற இரு பகுதித் திருச்சபைகளும் ஏதோ ஒரு வகையில் கடந்த காலத்தில் இப் பாலப்பணியினை ஆற்றியே வந்துள்ளன. தமிழ் கத்தோலிக்கர்களுடைய நிலைப்பாட்டை சிங்கள கத்தோலிக்கர்கள் சரியாகப் புரிந்துகொண்டார்களா? எவ்வறும்தூரம் புரிந்துகொண்டார்கள் அந்தப் புரிந்துணர்வுக்கேற்ப எந்த வகையில் செயலாற்றினார்கள் என்பதெல்லாம் ஆய்வு செய்யப்பட வேண்டியவை.

தமிழ் கத்தோலிக்க மக்களைப் பொறுத்தவரையில் சிங்களவர்களையும் தமிழர்களையும் இணைக்கக் கூடிய பணியினை ஆற்றுகின்ற பொறுப்பு யாழ். திருச்சபையையே பெரிதும் சாரும். இப் பணியினை யாழ்ப்பாணத் திருச்சபையின் தலைவர் என்கின்ற வகையில் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை யாழ். திருச்சபையின் பெயரால் தம்மால் இயன்ற வகையில் இலைமறை காயாக இருந்து ஆற்றி வருகிறார். இப் பணியின் வெளிப்பாட்டினை சமாதானத்துக்கான முன்முயற்சிகள் மேற்கொள்ளப்படும் இந்த நாட்களில் சற்றுத் தெளிவாக காணக் கூடியதாகவே உள்ளது.


இது விடயமாக அரசியல் தலைவர்கள், பிரமுகர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள், தூதுவர்கள் சமாதான ஏற்பாட்டாளர்கள், நல்லெண்ணக் குழுவினர்கள், தமிழ் குழுக்களின் தலைவர்கள் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் என பலரை சந்தித்துள்ளார். தமிழ் மக்களையும் அவர்களின் ஆசை, அபிலாசைகளையும் சமகாலத்தில் மேற் கிளம்பியுள்ள பிரச்சினைகளையும் நிலைப்பாடுகளையும் அவர்களுக்குத் தெளிவாக விளக்கி தமிழ் மக்கள் சார்பாக குரல் கொடுத்துக் கொண்டே வந்துள்ளார்.

இதன் ஒரு உச்சக்கட்டமாகவே ஜனாதிபதியை அண்மையில் யாழ். ஆயர் சந்தித்துள்ளார். யுத்தத்தினால் தீர்வு எதையும் அடையமுடியாது. யுத்தத்தை தொடரவேண்டாம். பேச்சுக்களை உடன் ஆரம்பியுங்கள். தமிழ் மக்களின் நிலைப்பாடு இதுவே என்று ஜனாதிபதிக்குத் தெளிவாக விளக்கியுள்ளார்.

தமிழ் கத்தோலிக்க பகுதியினரின் பிரதிநிதியாக யாழ். ஆயரின் இவ் அயராத பணி முழுப் பயனையும் காண செபிப்பது எம் ஒவ்வொருவருடைய தலையாய கடமையாகும். நீதியோடு கூடிய நிலையான சமாதானம் எம் மண்ணிலும் மக்கள் மனதுகளிலும் மிக விரைவில் உதிக்கட்டும்.




ஊடகவியலுக்கு ஓர் அறிமுகம்-பயிற்சிப் பட்டறையில் பாதுகாவலன் ஆசிரியர் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை, தினக்குரல் யாழ். பிராந்திய முகாமையாளர் திரு ஐயா சச்சிதானந்தம், வலம்புரி பத்திரிகையாளர்கள் சதீஸ் ஆ. ஜென்சன் டொனால்ட், அமலமரித் தியாகிகள் சபையின் மாகாண முதல்வர் அருள திரு ஏ. ஜீவேந்திராபோல் ஆகியோரை காணலாம்.



பயிற்சிப் பாசறையின் இறுதியில் சான்றிதழ்களை ஜீவாபோல் அடிகள் வழங்குகிறார். திரு ரமேஸ், திரு புவேந்திரன், அச்சுவேலிப் பாதுகாவலன் நிருபர் திருமதி மார்குலற், மறையாசிரியர் பயிற்சியாளர் திரு ஆகியோர் சான்றிதழ்களை பெறுகின்றனர்.




யாழ். அமலமரித் தியாகிகளின் மாகாண முதல்வர் ஏ. ஜீவேந்திரா போல் அடிகள் இறுதிநாள் நிகழ்விலே சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் தமது உரையில் வளர்ந்து வரும் கம்பியூட்டர் யுகத்தில் மனிதத் தன்மைக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விடுத்து கவர்ச்சியே ஈர்ப்பலைகளாக உள்ளன. இவை அரசியல், வியாபார, பல்துறைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. நான்குநாள் பயிற்சி பட்டறையில் பல வகையிலும் பயனடைந்துள்ளீர்கள். எனவே சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் செய்திகளைக் கொடுப்பது மிகவும் முக்கியம். பொழுதுபோக்கு வியாபார, அரசியல் லாபம் போன்ற குறுகிய நோக்கங்களுக்காக செய்திகளைத் திரிபுபடுத்தாது உண்மைச் செய்தியைக் கண்டுபிடிக்கும் திறனைக்கண்டு வாழுவதில்தான் ஊடகவியலின் வெற்றி தங்கியுள்ளது. அநுபவம், ஆற்றல் திறமைகளைத் தொடர்ந்தும் பயன்படுத்தி சமூகத்தின் வளர்ச்சிக்கு உதவ வாழ்த்துக்களைத் தெரிவித்து பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கினார்.



பயிற்சிப் பாசறையில் கலந்துகொண்ட யாழ். புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி இறுதியாண்டு அருள்சகோதரர்கள் மகன் அலோசியஸ் எம். பத்திநாதர், எஸ். யே. சி. பாஸ்கரன், எஸ். இராசநாயகம் ஆகியோர் பாதுகாவலன் ஆசிரியர் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை (நடுவில்) உடனும் பாசறையில் கலந்துகொண்ட றெக்ஸ் சவுந்தரா அடிகளுடனும் தமது பசுமையான நினைவுகளை படத்தினில் பொறித்தபோது...

## யாழ். மறைமாவட்ட பாதுகாவலன் பத்திரிகை – சமூகதொடர்பு ஆணைக்குழு இணைந்து நடாத்திய ஊடகவியலுக்கு ஓர் அறிமுகம்

3ம் பக்க தொடர்ச்சி...

மேற்கொள்ள வருகை தந்தார் திரு S. நாகநந்தன்.

### 4ம் நாள் நிகழ்வு (04.03.2001)

நான்காம் நாளின் நிகழ்வுகள் காலை 9.30 மணிக்கு இறை வணக்கத்துடன் ஆரம்பமானது. அதைத்தொடர்ந்து எமது பாதுகாவலன் இயக்குனரின் அறிமுகத்துடன் மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குனர் C.G ஜெயக்குமார் அடிகள் ஆசியுரை வழங்கினார். ஆவர் தமது தொடக்கவுரையில் ஊடகத்தை இயக்குபவர் மனிதர்களாகிய நாம் அதை சமுதாயத்துக்கு நல்லமுறையில் கொடுக்க இயங்கவேண்டியது எமது பணி எனவும் நீதி – மனிதமாண்பு – மனித விழுமியங்களைப் பேண வேண்டுமென்றும் அத்துடன் அரசு – மற்றும் அமைப்புக்களால் மக்களுக்குக் கொடுக்கப்படும் அநீதிகளைத் துணிவுடன் எடுத்துரைப்பவர்களாக செயற்பட வேண்டுமெனவும் எடுத்துரைத்து தமது ஆசியுரையை முடித்துக்கொண்டார்.

அடுத்து யாழ். பல்கலைக்கழக பொருளியற்துறைத்தலைவர் திரு. V.P.சிவநாதன் அறிமுகத்துடன் அவரது திரைப்பட திறனாய்வுத்துறை சார்ந்த விளக்கஉரை நிகழ்ந்தது. அவரது உரையில் நாம் சினிமாவை ஒழுக்க கேடானதாகக் கருதுவது எமது பார்வையில்தான் என்றும் திரைப்படங்களை இயக்குபவர்கள் அதை வியாபாரமாக்குவதையும் சுட்டிக்காட்டி சினிமாவை இயக்குனர்– நடிகர்– பார்வையாளர் என்ற கோணத் தில் பார்ப்பதுதான் சினிமா என விளக்கினார். அத்துடன் அதன் உட்பொருளை திரைப்பட மூடாக காண்பித்தும் விளக்கினார்.

யாழ். அ.ம.திகள் முதல்வர் A. ஜீவாபோல் அடிகள் 4நாள் பயிற்சி பட்டறையில் பல வகையிலும் பயனடைந்துள்ளீர்கள். எனவே சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் செய்திகளைக் கொடுப்பது மிகவும் முக்கியம். பொழுதுபோக்கு வியாபார, அரசியல் லாபம் போன்ற குறுகிய நோக்கங்களுக்காக செய்திகளைத் திரிபுபடுத்தாது உண்மைச் செய்தியைக் கண்டுபிடிக்கும் திறனைக்கண்டு வாழுவதில்தான் ஊடகவியலின் வெற்றி தங்கியுள்ளது. அநுபவம், ஆற்றல் திறமைகளைத் தொடர்ந்தும் பயன்படுத்தி சமூகத்தின் வளர்ச்சிக்கு உதவ வாழ்த்துக்களைத் தெரிவித்து பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மறைமாவட்ட பாதுகாவலன் பத்திரிகை - சமூகத் தொடர்பு ஆணைக்குழு இணைந்து நடாத்திய

# ஊடகவியலுக்கு ஓர் அறிமுகம்- பயிற்சிப் பட்டறை

## 1ம் நாள் நிகழ்வு (01.03.2001)

யாழ். மறை மாவட்ட பாதுகாவலன் பத்திரிகையும், சமூகத்தொடர்பு ஆணைக் குழுவும் இணைந்து நடாத்திய ஊடகவியலுக்கு ஓர் அறிமுகம் என்னும் பயிற்சிப் பட்டறையின் நிகழ்வு யாழ் மறைக்கல்வி நிலையத்தில் 01.03.2001 வியாழக் கிழமையன்று காலை 9.00 மணியளவில் ஆரம்பமாகியபோது யாழ். மறை மாவட்டத்தின் பல பங்குகளில் இருந்தும், பொதுத்துறைசார் நிறுவனங்களில் இருந் தும், யாழ். மறைமாவட்டத்தில் வெளியாகும் ஏனைய பத்திரிகை நிறுவனங் களிலிருந்தும் பல்துறைகள் பயிற்சியாளர்கள் அனைவரும் ஒருமித்து ஊடகவி யலுக்கு ஓர் அறிமுகம் என்னும் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்வதற்காக மிகவும் உத்வேகத்துடன் ஒன்றிணைந்தனர்.

அனைத்திற்கும் ஆதியும், அந்தமுமாக விளங்கும் ஆண்டவனின் அருள் வேண்டி எம் ஆரம்பநாள் நிகழ்வுகளை ஆரம்பிக்க எம்மோடு இணைந்த எமில்போல் அடிகள் பன்முகவடிவங்களில் சிந்தித் தெறிக்கும் மனித உள்ளங்களை ஒருமுகப்படுத்தி அமைதி நிலைக்கு அனைவரையும் அழைத்து நின்றார். சமூகத் தொடர்போடு எம்மை இணைக்கும் ஐம்புலன்களினூடாக ஆண்டவன் அருள்பாதம் அமைதி நிறைந்த இதயங்களில் சங்கமிக்க வைத்தமை உண்மையிலேயே பக்திப் பரவசம் மிக்கதாகும்.

மேலும் ஆரம்ப நாள் தொடக்கவுரை வழங்க வருகை தந்திருந்த ஜெறோ செல்வநாயகம் அடிகள் ( உப அதிபர்– புனித.பத்திரிசியார் கல்லூரி) தமது உரை யில் ஊடகவியல் சாதனங்கள் மனிதனை பூரணப்படுத்துபவனமாக அமைய வேண் டும். அதாவது, எழுத்தாளனாக, வாசகனாக, கலைஞனாக உண்மைகளை உரைப்ப வனாக விளங்க இவ் ஊடகவியல்துறை வழிவகுக்க வேண்டும். மேலும் ஊடக வியல்துறை, புகழுக்காகவோ சமூக பண்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகவோ அமை யாது நேர்மையான முறையில், நுண்மதியுடன் சமுதாயத்தின் தலைவிதிகளை நிர் ணயிப்பதில் இவற்றிற்குப் பெரும் பணியுண்டு. எனினும் இவை பல்வேறு எதிர்ப் புக்கள் மத்தியில் முன்னெடுக்க வேண்டும். குறிப்பாக யாழ். மண்ணிலே திருச்சபை எதிர்நோக்கியிருக்கும் சவால்களை வெற்றிகொள்ள பாதுகாவலன் பத்திரிகைத் துறையும் அரும்பணி ஆற்ற ஆசிகூறி நின்றார்.

தொடக்கவுரையைத் தொடர்ந்து இடம்பெற்ற முதல் நிகழ்வான நாடகமும் சமூகத்தொடர்பு சாதனமும் என்ற தலைப்பில் அரங்கியற் கல்லூரி நிறுவுனரும் பிரபல நாடக எழுத்தாளரும் நடிகருமான திருவாளர் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் சுவாரசியம் நிறைந்த வகையில் தமது உரையில் குறிப்பிடும் போது நாடகத்துறையினை விருத்தி செய்வதற்கு சமூகத்தொடர்பு சாதனங்கள் பெரும் உதவியாக அமைந்தபோதிலும் நாடகத்தினை நேரடியாகப் பார்க்கும் உயிர்த் துடிப்பினை இவை வெற்றிகரமாக வழங்கமுடியாது. ஆயினும் நாடக ஆவணங் களை வரலாற்று ரீதியில் பேணுவதில் இவை ஆற்றிய அரும்பணி அளப்பரியதே. மேலும் இத் தொடர்புசாதனங்கள் வழியாக நாடகங்களுக்கான விமரிசனங்களை, விளம்பரங்களை மேற்கொள்ளும்போது நடுநிலைமை பேணப்படுவது இவற்றின் பணியில் முக்கியமானதாகும். அத்துடன் சமூகத்தொடர்பு சாதனங்களைத் தகுந்த முறையில் வழிநடத்தும் பணி பத்திரிகைத்துறைக்கு உண்டு என்ற வகையில் அவை முழுமையான ஆளுமைத் தன்மையில் உண்மை விழுமியங்களை எடுத்துரைக்கும் சாதனங்களாக விளங்கவேண்டும் எனக்கூறி நடிப்புத்துறையில் தமக்குண்டான அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதுடன், பயிற்சியாளரின் பல்வேறு வினாக்க ளுக்கு விடையளித்து மகிழ்ச்சிகரமாக தமது பகுதியைப் பூர்த்தி செய்தனர்.

அன்றைய தினம் 11.15 மணியளவில் ஆரம்பமாகிய வீடியோ படப்பிடிப்புப் பற்றி யானு வீடியோ உரிமையாளர் திரு. ரஜீவன், அருள்சகோதரர் றொஷான் ஆகியோர் வீடியோ கருவி முறையைக் கையாளுகை மூலம் பயிற்சியாளர்களையும் ஈடுபடுத்தியமை வரவேற்பிற்குரியதாக இருந்ததாயினும் எல்லோருக்கும் அக் கருவிகளைக் கையாளும் பயிற்சி நடைமுறையில் சிக்கல் வாய்ந்ததாக அமைந்தது. எனினும் ஓர் நிகழ்விற்கோ அல்லது பத்திரிகைச் செய்திக்கோ அடிப்படை ரீதியாக எவ்வாறு வீடியோ படப்பிடிப்புச் செய்ய வேண்டும் என்பதை எடுத்துரைத்தமை பயனுடையதாகும்.

பிற்பகல் நிகழ்வுகள் 2.00மணியளவில் ஆரம்பமாகியபோது அந் நிகழ்வைச் சிறப்பிக்க உதயன் பத்திரிகை நிறுவனத்தின் இணையாசிரியராகிய திருவாளர் ந. வித்தியாதரன் *பத்திரிகைத்துறை நிர்வாகமும், அனுபவமும்* என்ற தலைப்பில் தமது உரையை வழங்க வருகை தந்திருந்தார். இவர் தமது உரையில் பத்திரிகையின் சிறப்பான தன்மைகள், பத்திரிகையின் கட்டமைப்பிற்கு அத்தியா வசியமான நெறிமுறைகள் பற்றியும் எடுத்துரைத்தார். குறிப்பாக பத்திரிகைத் துறையின் நிர்வாகம், ஆசிரியபீடம், விளம்பரம், விநியோகம், அச்சகப் பகுதி, அலுவலக நிர்வாகம், கணக்காளர், பாதுகாப்பு போன்ற பிரிவுகளை தனித்தனியே எடுத்துக்கூறி சிறப்பான விளக்கத்தை அளித்ததுடன் ஓர் பத்திரிகையாளன் எதிர் கொள்ளும் நிர்வாகச் சவால்கள் உயிருக்கே ஊறுவிளைவிப்பதாக அமைந்தாலும் அவர்கள் என்றும் நடுநிலமை, உண்மைத்தன்மை, இதயசுத்தி உறுதி ஆகிய தன்மைகளில் காலத்தின் சூழ்நிலைகளுடன் அனுசரித்து நிர்வாகத்தினை வழிநடாத்த வேண்டும் என்பதை தனது வாழ்வின் நிஜ அனுபவங்களினூடகவும் பகிர்ந்து கொண்டமை பயிற்சியாளர்களின் உணர்வுகளையே தூண்டுவதாக அமைந்தது.

இவ்வாறாக ஆரம்ப நாள் நிகழ்வுகள் சுவை நிறைந்ததாகவும், பயனுடைய தாகவும், பயிற்சியாளர்களின் ஆர்வத்தையும், சிந்தனைப்போக்கினைத் தூண்டு வதாகவும் அமைந்து மாலை 4.30 மணியளவில் நிகழ்வுகள் நன்றியுடன் நிறைவு பெற்றன.

## 2ம் நாள் நிகழ்வு (02.03.2001)

சுரங்கத்தைக் குடைபவர்கள் எல்லோருக்கும் மாணிக்கமும் செல்வமும் கிடைப் பதில்லை. வாழ்வின் முதுமையை எட்டியுள்ள இவ்வேளையில் என்னையும் அழைத் துக் கௌரவித்து தொடக்கஉரை ஆற்ற சந்தர்ப்பம் தந்தமைக்கு நன்றி தெரிவித்து பட்டறையின் 2ம் நாளில் உரையாற்றிய திரு. விக்ரர் – யாழ். ஜெயம் அவர்கள் பல நூற்றாண்டுகளாக பத்திரிகை, சஞ்சிகை, [illegible] திகழ்கின்றது. இவற்றிலும் பேனா சிறந்த ஊடகம் வரலாற்றின் பொன் ஏடுகளில் பதியப்பெற்ற ஊடகத்துறையானது முதன்முதலில் கி.பி. 618ல் சீனாவில் ஆரம்பித்து தொடர்ந்து ஜேர்மன் போன்ற நாடுகளிலும் பரவியது.

20ம் நூற்றாண்டு விஞ்ஞானமும், மெஞ்ஞானமும் ஒரே தராசில் இடப்பட்டு பார்க்கும் போது நாம் கற்பனை பண்ணாத அற்புதங்களைக் கண்டடையலாம். மனி தன் மனிதனாக சமூகத்துடன் அர்ப்பண உணர்வுடன் வாழச்செய்வது ஊடக வியலாளர்களின் கடமையாகும். சமூகத் தொடர்புப்பணியில் ஈடுபடுவோர் உண் மையுடைய குற்றமற்ற ஆக்கபூர்வமான விமர்சனங்களை அரசு, மக்கள் எனக் கரு தாது நீதியானதாக வன்முறைகளைக் களைந்து சமாதானத்தை ஏற்படுத்தும் நடு நிலையாளராக திகழவேண்டும். அவனின்றி அணுவும் அசையாது எனும் நோக்கு டன் செயற்பட வாழ்த்து கூறி தம் உரையை நிறைவு செய்தார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ். சேவை பொறுப்பதிகாரிகள், அறிவிப்பாளர்கள் அடங்கிய குழவினர் வருகை தந்து ''வானொலியும் தொடர்பி யலும்'' எனும் பொருளில் பல அரிய கருத்துக்களை செய்முறை விளக்கத்துடன் எடுத்துரைத்தனர். அறிவிப்பாளர் திரு. A. M தாஜ் வானொலி கண்டுபிடிக்க முன்பும் காணபபட்ட தகவல் பரிமாற்றத்துடன் தற்போதைய விஞ்ஞான உலக வளர்ச்சிப் போக்குடன் தொடர்புபடுத்தினார். அழகான குரல் வளமும், அழகாக உச்சரிக்கும் தன்மையும் அறிவிப்பாளருக்கு இருத்தல் அவசியம். இலங்கையில் வானொலி சேவை வளர்ச்சிப்படி முறை வரலாறு, நிகழ்ச்சி செய்யப்படும் விதம் போன்றவற்றை இனிமையாக விளக்கினார்.

யாழ். சேவை பொறுப்பதிகாரி திரு அநுர டீ. சில்வா சிற்றலை, பண்பலை, மத்தியஅலை மூலமாக ஒலிபரப்பு 40Km சுற்றளவை சூழ்ந்து ளிவாக கேட்கின்றது. தமிழ் தெரியாத தன்மையில் தமக்கு தெரிந்த தமிழ்ச் சொற்கள் ஊடாகவும் ஆங்கில மொழியில் பொறுமையாகவும் விளக்கமளித்தார். யாழ் சேவை நிர்வாக கட்டமைப்பு யாழ். சேவை நிகழ்ச்சிக்கு எவ்வாறு எழுதுவது போன்ற விளக் கங்களை வழங்கியதுடன் பயிற்சியாளர்களால் கேட்கப்பட்ட வினாக்களுக்குரிய பதிலை ஒவ்வொரு கருத்துரையாளர்களும் பொறுமையுடன் வழங்கி சந்தேகங்களை நீக்கினர்.

சமகாலச் சூழலில் பத்திரிகையின் பணி எனும் பொருளில் கருத்துரை வழங்க வருகை தந்த ஊடகவியலாளர், கிளைமுகாமையாளர், தினக்குரல் யாழ்ப்பாணம் திரு ஐயா சச்சிதானந்தம் உரையாற்றுகையில் ,

பேசுவது சுலபம் செயற்படுவது கடினம். விடுதலைப்போர் வளர்ச்சியில் ஆயுத கலாசாரத்தின் மத்தியில் எல்லா நிகழ்வுகளையும் வெளிக்கொணர்வது பத்திரிகையின் பணியாகும். முக்கியமானது எதுவோ அதனை நகைச்சுவையாக சமூக நலனில் அக்கறை கொண்டதாக வெளியிட வேண்டும்.

''ஏசுவார்கள் எரிப்பார்கள் எதற்கும் அஞ்சவேண்டாம். உண்மையைஎழுதுங்கள் உள்ளபடி எழுதுங்கள்'' எனும் யோகர் சுவாமி அவர்களின் வாக்கைக் கொண்டு பத்திரிகை பணிபுரியுமாறு எடுத்துரைத்தார்.

பத்திரிகையியலுக்கு ஓர் அறிமுகம் எனும் தலைப்பில் பாதுகாவலன் ஆசிரியர் ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் மிகவும் பிரயோசனமான கருத்துக்களை துறை சார்ந்த சாதனங்களுடன் வெளிக்கொணர்ந்தார்.

பத்திரிகைக்குச் செய்தி கொடுக்கும் போது ஆர்வமான கருத்துக்களை முன்னுக்கு எழுதுதல் , ஆர்வத்தைத் தூண்டுவதனை தலையங்கமாக கொடுத்தல் சிறப்பானது என எடுத்துரைத்தார்.

இவ்வாறாக சமூகத்தொடர்பு சாதன ஆணைக்குழுவின் 2ம் நாள் பயிற்சிகள் மாலை 4 மணியளவில் நிறைவடைந்தன.

## 3ம் நாள் நிகழ்வு (03.03.2001)

பயிற்சியாளரின் மன ஒருங்கிணைவிற்குப் பின் அன்றைய நிகழ்விற்குத் தொடக்கவுரை வழங்க வருகை தந்திருந்த செல்வி வயலற் இம்மானுவேல் (இளைப்பாறிய ஆசிரியை யாழ். தி.கு.க.மடம்) வரவேற்று அறிமுகப்படுத்தி, பயிற்சியாளர்களுக்கு இலைமறைகாயாக வாழ்ந்த அவரை உள்ளங்கை நெல்லிக் கனியாகிடச் செய்தார் செல்வி ஜீன் டிலாந்தி.

தொடக்கவுரை வழங்க வருகை தந்தவர்கள் பற்றிய அறிமுகவுரையைத் தொடர்ந்து மிகவும் அமைதியாகவும் அடக்கமாகவும் எளிமையாகவும் இன்றைய நவநாரீக உலகில் வளர்ந்துவிட்ட ஊடகவியல் துறையின் காத்திரத்தையும் அதன் சாதகமான பாதகமான விளைவுகளையும் இவற்றினூடாகவே இன்றைய மனிதன் முகம்கொடுத்து வாழவேண்டும் என்பதையும் வலியுறுத்தி தனது தொடக்கவுரையை ஆரம்பித்த இவர் தொடர்ந்து கூறுகையில், புதுமையை நாடும் உலகியல் நோக்கில் ஊடகத்துறையின் பணி உயிர்நாடியாக விளங்குகின்ற வேளையில் அவை தனியே அறிவின் உயர்தன்மையை மட்டும் வெளிக்கொணர்வதாக அமைந்துவிடாது உண்மையான மனித உறவுகளைப்பரப்ப, வளர்க்க, விளக்க உதவியளிக்க வேண்டும். இதற்கு ஊடகத் துறைசார்ந்தோரின் பல்வகைப்பணிகள் எவ்வாறு அமைய வேண்டும் என்ற வினாவொன்றைத் தொடுத்து பயிற்சியாளர்களின் சிந்தனைத்திறனைத் தூண்டினார். மேலும் இன்றைய நவீனத்துவ ஊடகவியல் சாதனங்களின் நன்மைதீமைகளையும் விளக்கிய பின் பாதுகாவலன் பத்திரிகையின் ஊடகவியல் துறை எவ்வளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது. தொடர்ந்தும் எவ்வாறு சமகால நிகழ்வுகள், நெருக்கிடைகளுக்கு ஊடாக முன்னேறி கத்தோலிக்க திருச்சபைக்கும் ஊடகவியல் சமூகத்திற்கும் எவ்வாறு பணியாற்ற முடியும் எனவும் அழகாகவும் எளியமொழிநடையிலும் விபரித்தார்.

இதனைத் தொடர்ந்து இப் பயிற்சிப்பட்டறையின் முக்கிய கட்டமாக பயிற்சி யாளரின் களப்பிரயோகம் ஆரம்பமாகி அவர்கள் ஆறுகுழுக்களாகப் பிரிந்து ஆறு கோணங்களில் இருந்தும் ஒவ்வோர் குழுவிற்கும் கொடுக்கப்பட்ட ஊடகவியல் துறைசார்ந்த கருத்துக்களை ஆராய்ந்து தமது வேலைத்திட்டங்களை மேற்கொண்ட நிகழ்வு உண்மையிலேயே பல்வேறுபட்ட ஊடகவியல் குழக்கள் ஒன்றிணைந்து புதிய உலகம் ஒன்றை ஊடகவியலின் ஊடாக உருவாக்க முனைந்துள்ளமை போன்றதொரு எண்ணக்கருவை பார்ப்போர் மட்டில் உருவாக்கும் இச் சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு பயிற்சியாளரும் தத்தமக்குரிய பொறுப்புக்களை சுறுசுறுப்புடனும் ஏட்டிக்குப் போட்டியாகவும் செயல்பட்டமை கண்கூடு.

இவற்றைத் தொடர்ந்து பி.ப. 2.00மணியளவில் அந்நாளின் முக்கிய நிகழ்வும் நவீன யுகத்தையே ஒரு கைக்குள் அடக்கியாளும் கணணித்துறை– அதாவது சமூகத் தொடர்பாடலில் கணணித்துறை என்ற தலைப்பில் பயிற்சி நெறியை

(தொடர்ச்சி... 2ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு இசையில் சினிமா இசையின் தாக்கம்

அருள்திரு பா.பி. இராஜசிங்கம்

**இறைவனுக்கு மாட்சிமை நல்குவதையும், மனிதனைப் புனிதப்படுத்துவதையும் தனது உயரிய நோக்காகக் கொண்ட திரு இசை, செபத்தை மிக இனிதாக எடுத்துரைத்தும், உள ஒன்றிப்பை வளர்த்தும், திருச்சடங்குகளுக்கு ஆடம்பரம் ஊட்டியும் தனது புனிதத் தன்மையைக் கட்டிக்காத்து இசைகளுக்குள்ளே தனித்துவமிக்க ஒன்றாகக் காணப்படுகின்றது (திருவழிபாடு 112) என்பதனை வத்திக்கான் சங்கஏடு சுட்டிக் காட்டுகின்றது. இவ்வாறு இசைக்குள்ளே தனித்துவமான திரு இசை மக்களின் உள்ளத்தைத் தொட்டு இறைவனிலே தங்கள் முழுக்கவனத்தைச் செலுத்தவும், மனிதனை எளிதாக ஆராதனைகளில் ஈடுபடச் செய்யவும் வல்லமை கொண்டதாகக் காணப்படுகின்றது. திரு இசைக்குரிய இவ் வல்லமை திரு இசையின் வரலாற்றில் கண்டுணரக் கூடியதாக இருக்கின்றது. ஆனால் இன்று அது தன் வல்லமையை இழந்து இறைவன்பால் மக்களின் உள்ளங்களை ஈர்க்க முடியாது இருப்பதை உணரக் கூடியதாக உள்ளது. காரணம் இந்த உலகியற் போக்குக்குள்ளே திரு இசையும் இழுத்தடித்துச் செல்லப்படுகின்றது. உலகியற் போக்கு என்று கூறும் போது இன்றைய சினிமா விளைவிக்கும் பாதிப்பு குறிப்பிடத்தக்கது.**

**சினிமா உலகில் வளர்ந்துவரும் சிந்தனைகளும் தொழிநுட்பவியல் முன்னேற்றமும் குறிப்பாக கவர்ச்சிமிகு இசையும் பாடல்களும் திருவழிபாடுகளின் திரு இசையிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இதனால் இன்றைய திரு இசையில் பெரும் சீர்கேடுகள் காணப்படுகின்றன. இச் சீர்கேடுகளினால் திரு இசையின் நோக்கம் கைவிடப்பட்ட நிலையில் அதன் புனிதத்தன்மை மறக்கப்பட்ட நிலையில் எமது வழிபாடுகள் அமைகின்றன. இதனால் பக்தியார்வம் சிதைந்த நிலையில் வழிபாடுகளில் மக்கள் பங்குகொள்வதை அவதானிக்க முடிகிறது. எனவேதான் திரு இசையில் சினிமா இசையின் அதிகாரம் பற்றிய விழிப்புணர்வு பொதுவாகவும், சிறப்பாகப் பாடகர் குழுக்களுக்கும் ஏற்படுத்துவதே இக் கட்டுரையின் நோக்காகவுள்ளது.**

## திருஇசையா? இசைக்கச்சேரியா?

திரு இசை தன்னியல்பிலேயே புனிதமானது மட்டுமல்லாமல் மனிதனையும் புனிதனாக்குகின்றது. ஆனால் இன்று அது தனது வல்லமையை இழந்துவிட்டது. பக்தியார்வத்துடன் மனித உள்ளங்களை கடவுள் பக்கம் திருப்பவேண்டிய திரு இசையினுள் சினிமா இசையின் ஊடுருவல் பெரும் குழப்பத்தை உண்டாக்குகின்றது. திருஇசை ஒரு இசைக்கச்சேரியாக மாறிவிட்டது. சினிமா இசையில் அதிக இசைக் கருவிகளும், வேறுபட்ட இசைநுட்பங்களும், வடிவங்களும் பயன்படுத்தப்ப டுவது போல திரு இசையிலும் அளவுக்கதிகமான முறையில் பொருத்தமற்ற இசைக்கருவிகளும் நீண்ட கடினமான முன்னிசையும், இடை இசையும் கையாளப்படுவதினால் திரு வழிபாட்டில் திரு இசை ஒரு கச்சேரியாக தனித்த ஒரு குழுவினரின் ஏகபோக சொத்தாக மாறிவருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. இதனால் பக்தியார்வம் குறைந்து மக்கள் மத்தியில் பல பராக்குகளுக்குரிய சிந்தனைகள் மேலோங்குகின்றன மேலும் எமது ஆலயங்களில் இளைய தலைமுறையினரே பாடகர் குழுக்களில் உறுப்பினர்களாக இருப்பதனால் எந்தளவிற்கு அவர்கள் சினிமாவினால் இழுத் தடித்துச் செல்லப்படுகின்றார்களோ, அந்தளவிற்கு அவர்கள் துள்ளல் பாடல்களையே விரும்புகின்றார்கள். ஒரு முறை திரு இசைக்கு இசைக்கருவி வாசிக்கின்ற ஒருவரிடம் 'திரு இசைக்கு அதிக இசைக்கருவிகள் பயன்படுத்தி திரு இசையின் பக்தியுணர்வை என் குழப்புகிறீர்கள்?' என்று கேட்டபோது, 'இன்றைய உலகில் மக்கள் சினிமா இசையினால் கவரப்படுகின்றார்கள், எனவே சினிமாவில் காணப்படுகின்ற இசையமைப்பு முறைகளைக் கையாண்டால்தான் வழிபாட்டிற்கு மக்களைக் கவர்ந்து கொள்ளமுடியும்' என்றார். இக்கூற்று மிகவும் பிழையானது. நாம் ஒன்றை விளங்கிக் கொள்ளவேண்டும். திரு இசை வேறு, சினிமா இசை வேறு. இரண்டின் நோக்கங்களும் வேறு. இரண்டையும் கலக்கமுடியாது.

## எமது இரசனை என்ன?

வழிபாடுகளில் திருவிழாக்கால வழிபாடுகளிலும் கூட, ஆலய பாடகர் குழாமின் செயற்பாடு முக்கியம். அது அர்த்தமுள்ளதாக அமைய வேண்டும். இன்றைய சூழலில் நாம் எல்லோரும் புதுமை விரும்பிகளாகவே இருக்கின்றோம். போட்டி மனப் பான்மையும் எம்மிடம் உண்டு. அதனால் புதிய பாடல்களை நாம் அச்சிட்டுப் பாடுகின்றோம். இதனால் வேறு ஆலயங்களில் பாடாத பாடல்களாக அமைய வேண் டும் என்கின்ற மனப்பான்மையையும் கொண்டுள்ளோம். இதனால் பாடகர் தனித்துப் பாட மக்கள் சினிமாப் படம் பார்த்து, பாடல்களைக் கேட்பதுபோல் ஆல்யத்திலேயே அமர்ந்திருக்கின்றார்கள். எல்லோருக்கும் தெரிந்த திருவழிபாட்டுப்பாடல்களிற்கு நாம் மதிப்புக் கொடுப்பதில்லை. புதிய சினிமாப் பாடல்களில் இரசனையை, வளர்த்துக்கொண்டிருக்கும் சமூகத்திற்கு திரு இசையிலும் புதுமை ஒன்று செய்ய வேண்டும் என்ற ஆசை. இதனால் புதிய பாடல்களைப் பாடுகின்றார்கள். மறு பக்கத்தில் இசைக்கருவிகளின் கட்டுக்கடங்காத இசை மக்களின் பக்தியுணர்வைத் குழப்புகின்றது. சிலவேளைகளில் மக்களின் தியான உணர்வை துாண்டி எழுப்ப வேண்டிய தியானப்பாடல்கள் மக்களின் தியான உணர்வுகளைத் திசைதிருப்பி விடுகின்றன. திருவழிபாட்டில் தியானப்பாடல்கள் மிகவும் முக்கியமானவையாகும். இவை சங்கீதங்களை அடிப்படையாக வைத்தே இசையமைக்கப்படுகின்றன. சங்கீதங்கள் மீட்பின் வரலாற்றை நன்றியோடு நினைவுகூரும் பக்திப்பாடல்கள் திருப்பலியில் இறைவார்த்தை எமக்கு மீட்பு வரலாற்றையே நினைவூட்டுகின்றது. நாம் கேட்கும் இறைவார்த்தையை உள்ளத்திலிருத்தி தியானிக்க, இறைவனைப் புகழ, சங்கீதங்கள் எமது உள்ளங்களை ஒருமுகப்படுத்துகின்றன. இவ்வாறான தியான சங்கீதங்கள் இலகுவான இசையைக் கொண்ட பாடல்களாக அமையவேண்டும். ஆனால் தியானப் பாடல்கள் இன்றைய சினிமா இசையமைப்பாளர்கள் இசையமைப்பது போன்று இசையமைக்கப்பட்டுள்ளதால் மக்கள் மனதில் செபிக்கும் மனநிலையானது திசைதிருப்பப்படுகின்றது. இதனால் பாடகர்களின் குரல்கள் எமது காதுகளுக்கு எட்டுவதில்லை. மாறாக இசைக்கருவிகளின் இரைச்சல்களே பெரும்பாலான சந்தர்ப்பங்களில் எமது காதுகளுக்கு எட்டுகின்றன. இதனால் பாடல்களுக்கு மெருகூட்ட இசைக்கருவிகள் என்ற நிலைமாறி இசைக்கருவிகளின் இரைச்சலுக்காகப் பாடல்களும் பாடகர் குழாமும் என்ற நிலை உருவாகிவிட்டது. எமது வழிபாடுகளுக்கு ஏன் இந்த நிலை?

## இசைக் கருவிகளுக்கு வரையறை உண்டா?

திருவழிபாட்டின் திரு இசைக்கு எப்பேற்பட்ட இசைக்கருவிகள் பயன் படுத்தப்படவேண்டும் என்பதற்கு ஒரு வரையறை உண்டு. எமது பண்பாடு, கலாச்சாரம் என்பவற்றின் எல்லைக்குள்ளேயே நின்று இசைக்கருவிகள் தெரிந்தெடுக்க வேண்டும். இசைக்கருவியைத் தெரிவு செய்யும்போது திருச்சபையின் தகுதிவாய்ந்த அதிகாரியின் ஆலோசனை பெற்றிருக்க வேண்டும். அத்தோடு அக் கருவிகள் புனித வழிபாடுகளில் பயன்படுத்தப்படத் தகுதிபெறக்கூடியனவாக இருக்கவேண்டும். கோயிலின் பெருமையோடு பொருந்திச் செல்லுபனவாகவும், விசுவாசிகளின் பக்தியுணர்வை வளர்க்கத் துணைபுரிபனவாகவும் விளங்க வேண்டும் என்று வத்திக்கான் சங்க ஏடு எடுத்துரைக்கின்றது. ஆனால் இன்றைய சினிமா மோகத்திற்கு அடிமையாகி எமது பண்பாடு, கலாச்சாரம் என்பவற்றிற்கு அப்பாற் பட்ட நிலையில், மேல் நாட்டு இசைக்கருவிகளை திரு இசைக்குள் செலுத்துவது தவறு. இந் நிலை திரு இசையில் இன்று காணப்படுவது வருந்தத்தக்கது. மேலைத்தேச இசையின் தாளத்தையும் (beat) கீழத்தேச இசையின் தாளத்தையும் (சுரம்) ஒன்றாகப் பயன்படுத்துவது தவறு. இதைச்சுட்டிக்காட்டி இரண்டையும் சேர்க்கக்கூடாது என்ற கூறிய போது, சினிமாவில் அப்படிச் செய்கிறார்களே என்ற பதிலைக் கேட்ட அனுபவமும் எனக்கு உண்டு.

## பக்தி உணர்வா? காதல் உணர்வா?

இறைவனை விளித்து எழுதப்பட்டுள்ள கிறிஸ்தவ பாடல்களின் சில வரிகள் மனித காதலை வெளிப்படுத்தப் பயன்படுவது மிகுந்த வேதனைக்குரியதாகும். உதாரணமாக, 'உன்னை நான் ஒருபோதும் மறப்பதேயில்லை உனக்காக உன்னில் இருக்கின்றேன்' என்ற பாடலின் வரிகளும், 'உனக்காக காத்திருந்தேன் – என் இதயத்தின் வேந்தனே நீ வருவாய்' என்ற பாடலின் வரிகளும் சுயநல தேவைகளைத் திருப்திப் படுத்த ஒரு சிலரால் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஆனாலும் இவை இறைவன் மட்டில் மனிதன் கொண்டிருக்கும் அன்பின். வெளிப்பாடாகப் பாடப்பட்ட பாடல்களாகும். இப் பாடல்களை இன்றைய தலைமுறையினர் தம்முடைய தேவைக ளுக்கேற்ப கருத்துமாற்றம் செய்து காதல் உணர்வுகளை வெளிக்கொணர்வது விரும்பத்தகாத செயலாகும். இப்படிப்பட்ட நடவடிக்கைகளை இறைதுரோகச் செயலென்றே கூறவேண்டும்.

பழைய சினிமாவில் வரும் காதல் பாடல்களில் ஒரு பக்தியுணர்வு உண்டு. இருப்பினும் இளைய தலைமுறையினர் புதுமை விரும்பிகளாக இருப்பதனால் பக்தியுணர்வைத் துாண்டும் பழைய பாடல்களை விடுத்து புதிய பாடல்களையே விரும்புகின்றனர். இந்நிலை சினிமாவில் மட்டுமல்ல திரு இசையிலும் காணப்ப டுகின்றது. புதிய பாடல்களைப் பாட வேண்டும் என்ற அவாவினால் எப்படிப்பட்ட பாடல்களைத் தெரிந்தெடுக்க வேண்டும் என்ற சிந்தனையே அற்றவர்களாக திருவழிபாட்டிற்கு ஒவ்வாத பாடல்களைத் தெரிந்தெடுத்துப் பாடும் நிலை இன்று காணப்படுகின்றது. பெரும்பாலும் இப்பாடல்கள் யாழ். மறைமாவட்ட திருவழிபாட்டு நிலையத்தினால் அங்கீகரிக்கப்படாத பாடல்களாகவே இருக்கின்றன.

## திருஇசையா? இசைக்கச்சேரியா?

சினிமாவில் தொழிநுட்ப வளர்ச்சியினால் கிறிஸ்தவ பக்திப் பாடல்களுக்குப் பெரும் அச்சுறுத்தல்கள் ஏற்படுகின்றன. பல சினிமாப் பாடல்களின் இசையமைப்பின் வடிவமைப்பில் இன்று பல பக்திப்பாடல்கள் வெளிவந்துள்ளன. இப்பாடல்களைக் கேட்டு பக்தியுணர்வுகளுக்குப் பதிலாக சினிமாவில் எண்ணங்களே எல்லோர் மனதிலும் தோன்றுகின்றன. இப்படிப்பட்ட பாடல்களினால் இறை பக்தியுணர்வுகளும் இறையியல் கருத்துகளும் இம்சிக்கப்படுகின்றன. அதிகமாக அன்னை மரியாளைப் பற்றிய பாடல்களே இப்படி வெளிவந்து கொண்டிருக்கின்றன. இது யாருடைய வேலை? கத்தோலிக்க விசுவாசத்தைப் குழப்ப முனையும் தீய சக்திகளுடைய வேலையா? அல்லது சினிமா உணர்வுகளுக்குள்ளே தனது விசுவாசத்தை அடிமைப்படுத்திக் கொண்டவர்களது வேலையா?

## திரு இசைக்கு அங்கீகாரம் கொடுப்பது யார்?

இன்று கிறிஸ்தவ ஒலி நாடாக்கள் பல வெளிவந்து கொண்டிருக்கின்றன. இந்நாடாக்களில் உள்ள பாடல்கள் எல்லாம் திருவழிபாட்டு திருஇசைக்கு உகந்தவை அல்ல, அவை திருவழிபாட்டில் பயன்படுத்த அங்கீகாரம் பெறப்படாத வேளையிலும் பலரினால் திருவழிபாட்டில் பயன்படுத்தப்படுவது தவறாகும். எமது யாழ் மறைமாவட்டத்தைப் பொறுத்தமட்டில் இந்தியாவிலிருந்தும், வெளி மாவட்டங் களிலிருந்தும், எமது மறைமாவட்டத்திலிருந்தும் கிறிஸ்தவ ஒலி நாடாக்கள் வந்து குவிந்துகொண்டிருக்கின்றன. இந்த ஒலி நாடாக்களை எல்லாம் திரு இசை என்ற வரையறைக்குள் உள்ளடக்க முடியாது.

அவை வெளியிடத்தில் அங்கீகாரம் பெற்றிருந்தாலும் எமது மறைமாவட்டத்தைப் பொறுத்த மட்டில் யாழ் மறைமாவட்ட திருவழிபாட்டு நிலையத்தின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கவேண்டும். எமது மறைமாவட்டத்தில் வெளிவரும் கிறிஸ்தவ ஒலிநாடாக்களை வெளியிடுவதற்கு ஆயரின் அங்கீகாரம் பெற்றிருந்தாலும் திருவழிபாட்டில் அவை பயன்படுத்துவதற்கு யாழ். மறைமாவட்ட திருவழிபாட்டு நிலையத்தின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

கடந்தகால திருஇசைப் பாடற் புத்தகங்கள்களைப் பார்க்கும்போது மேல் குறிப்பிட்ட அங்கீகாரம் தெளிவாகப் புலப்படுகின்றது.

1972ம் ஆண்டு **இறைவனைப் புகழ்வோம்**, 1980ம் ஆண்டு **இறைபுகழ் பாடுவோம்**, 1983ம் ஆண்டு **இறைமக்கள் இசையமுதம்**, 1984ம் ஆண்டு **இறைவனைப் புகழ்வோம்**, 1986ம் ஆண்டு **இறைபண் பாடுவோம்**, 1990ம் ஆண்டு **இசைபாடும் இதயம்** 1999ம் ஆண்டு **விடியலின் கீதங்கள்** போன்ற திரு இசைப்பாடல்கள் அடங்கிய புத்தகங்கள் முன்னர் மறைக்கல்வி நிலையத்தினாலும் பின்னர் யாழ். மறைமாவட்ட திருவழிபாட்டு நிலையத்தினாலும் வெளியிடப் பட்டவையாகும். 1999ம் ஆண்டு விடியலின் கீதங்கள் வெளியீட்டு விழாவில் ஆயர் தமது ஆசியுரையில் ஐந்து வருடங்களுக்காவது இப் புத்தகத்திலுள்ள பாடல்களை வழிபாட்டில் பாடவேண்டும் என்று கூறினார். இருப்பினும் இந்த ஐந்து வருட காலப்பகுதிக்குள் வெளிவரும் நல்ல புதிய பாடல்களையும், யாழ். திருவழிபாட்டு நிலையம் அங்கீகரித்து ஒருசில புதிய பாடல்களைத் திரு இசைக்குள் புகுத்துவது புதுமைவிரும்பிகளை திருவழிபாட்டில் இணைய வழிவகுக்கும். சிறப்பாக உள்ளூரில் வெளிவரும் கிறிஸ்தவ ஒலிநாடாக்களிலுள்ள பாடல்களைத் தெரிவுசெய்து அங்கீகரிக்கின்றபோது உள்ளூர் இசையமைப்பாளர்களை ஊக்குவிப்பது மட்டுமல்லாமல் எமது சூழலோடு தொடர்புடைய பாடல்களையும் திருவழிபாட்டில் பாடக்கூடியதாகவும் இருக்கும்.

**எனவே பாடகர் குழாமினரும், இசைக்கருவிகள் மீட்டுபவர்களும், இசையமைப்பாளர்களும், விழிப்பாக இருந்து திருச்சபை மரபினுடையவும், ஒழுங்குமுறையினுடையவும் விதிகளையும், சட்டங்களையும், கைக்கொண்டு இறைவனுக்கு மாட்சி நல்குவதையும், மனிதனைப் புனிதப் படுத்துவதையுமே தனது நோக்கமாகக் கொண்ட திருஇசையின் குறிக்கோளைக் கருத்தில் இருத்தி செயற்பட வேண்டும். (திருவழிபாடு 112) இச் செயற்பாட்டிற்கு ஊக்கம் கொடுக்கும் முகமாக யாழ். மறைமாவட்டத்தில் திருவழிபாட்டு நிலையத்தினரால் பாடகர் குழாமினருக்கும், இசைக்கருவி மீட்டுபவர்களுக்கும், இசையமைப்பாளர்களுக்கும் இன்னும் குருக்கள், துறவியர், குருமாணவர்களுக்கும் திருவழிபாட்டில் திருஇசை பற்றிய கருத்துரைகள் வழங்கும் பட்ட [illegible] திருச்சடங்குகளும் ஒழுங்கு செய்யப்படவேண்டும். பல்வேறு ஊடகங்களினூடாக திருஇசை, அதன் பயன்பாடு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி திரு இசையானது மற்ற எல்லா இசைகளிலிருந்தும் தனித்துவமானது என்பதைத் தெளிபடுத்த வேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலுவையின் வழி சீவியம்

## ஈழத்துக் கல்வாரி

ஆக்கம்
யாழ் அடைக்கல அன்னை ஆலய பங்குத்தந்தை
அருள்திரு ம. இ. பயஸ்

எஸ். எம். ஜோசெவ்

திருநிலை 01

### இயேசுவுக்கு மரணத் தீர்ப்பு

மமதை பிடித்த மதத் தலைவர்கள்: அன்னாஸ், கைப்பாஸ், ஆட்சிப்பீட அதிகாரிகள்; ஏரோது, பிலாத்து, இவர்கள் முன் குற்றவாளி இறைமகன் கிறிஸ்து, அநீத குற்றச்சாட்டு, அநாசார நிந்தனை, அநியாயத்தீர்ப்பு, சிலுவை மரணம்; இவைகள், நன்மை செய்தவருக்கு நயவஞ்சகர்கள் அளித்த பரிசு. நிந்தனையின் சூழ் நிலையில்............ நான் விரும்பாத வழிகளில்.......... அபிப்பிராய பேதங்களில்.......... விட்டுக்கொடுக்கும் பெருந்தன்மையில் இவற்றில் எதில் நான் கிறிஸ்துவைப் போலிருக்கிறேன்.

திருநிலை 02

### தன் சிலுவையை இயேசு சுமக்கிறார்

சிறையில் கிறிஸ்து.......

அயோக்கியர், அரக்கர் நடுவில் இரவைக் கழிக் கின்றார். கற்றூணில், கட்டுண்டு கசையடி; அங்கம் எல்லாம் ஆறாப் புண்கள்; கண்களை மறைக்க கந்தல் துணி; கையில் மூங்கில்தடி; தலையில் முள்முடி; முகத்தில் உமிழ்நீர்; அவமான அரசன் என அவசங்கை; இப்போது சுமந்துசெல்ல ஒரு சிலுவை. கொலைக் களத்திற்கு இழுத்துச் செல்லப்படுகிறது செம்மறி, அதன் வாயிலிருந்து வார்த்தை வெளிவரவில்லை. இத்தனை அவமான துன்பங்களையும் சகிக்க வேண்டிய மனோதிடன்தான் என்னே!

நான் துன்பத்தைக்கண்டு முறுமுறுக்கவில்லையா? முறைப்படவில்லையா? அற்பகாரியத்திற்கும் அமைதியை இழக்கவில்லையா? முறுமுறுக்கும், முறைப்படும் ஒவ்வொருமுறையும் படிப்படியாக மனோபலத்தை இழந்து விடுகின்றாய் என்பதை மனதிலிருத்து.

திருநிலை 03

### இயேசு பாரச்சிலுவையின் கீழ் விழுகின்றார்

பாரச் சிலுவையின் பழு, உடல் வருத்தம், மனோ வேதனை, இயேசுவும் மனிதன் அல்லவா? தன் பல வீனத்தால் விழுகின்றார். ஆறுதல்கூற ஒருவரும் இல்லை அப்பெரிய சனக்கூட்டத்தில். ஆறுதல் அற்றோர்க்கு ஆறுதலும், அண்டினோர்க்கு அரவணைப்பும், அன் போர்டிழந்த ஆண்டவருக்கு இது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போலல்லவா இருந்திருக்கும்? என் வாழ்வில் குறுக்கிடுபவர்கள் பலர், வேளிப்பார்வைக்கு முக மலர்ச்சியுடன் தோன்றுபவர்கள் சிலர், அவர்கள் உள்ளக் கவலைகளை, மனோ வேதனை துன்பங்களை யாரறிவார்? எனக்கு விருப்பமில்லாதவர்களின் துன்ப துயரங்களை ஊகித்து உணர்பவர் யார்? இத்தகையோருக்கு என் இதமான செயல்களால் ஆறுதலும் தேறுதலுமாக இருக்கின்றேனா?

திருநிலை 04

### தன் அன்னையை இயேசு சந்திக்கின்றார்

அன்று மரியன்னை தன் மகவைக் கண்டபோது அவர் முகத்தில் அழகு சிந்தியது. இன்று அம்முகம் அழகிழந்து, உருவிழந்து இருப்பதைக் காண்கின்றாள். அன்று, கருணைகனிந்து பாவியர்க்குச் சாந்தியளித்த கண்கள், இன்று இரத்தக்கறை படிந்து, இருள்மண்டிக் கிடக்கின்றன. அன்று அன்பும் ஆறுதலும், நம்பிக்கையும் ஊட்டிய உதடுகள் இன்று காய்ந்து கறைபடிந்து வரண்டு கிடக்கின்றன. தாயின் சோகம் தனையனின் இருதயத்தைத் தளரச்செய்கின்றது. மரியன்னையோ இந்நேரத்தில் தன் மகவுக்குக் கைகொடுத்து உதவ முடியவில்லையே என்று பதறுகிறார். சந்தர்ப்பம் சூழ் நிலை இருக்கும் போதெல்லாம் என் அயலவருக்கு உதவுகின்றேனா? நற்காரியங்களுக்கு நான் ஒரு பக்க பலமாக, தூண்டுகோலாக விளங்குகின்றேனா? எனது உதவி எத்தனையோபேருக்கு வேண்டும் என்று இறைவன் விரும்புகின்றார். ஆனால் கிறிஸ்துவாக விளங்க வேண்டிய நான், இக் கருமங்களில் என்ன செய்கின்றேன்?

திருநிலை 05

### சீரேன் ஊர் சீமோன் இயேசு சிலுவை சுமக்க உதவுகின்றார்

நன்றியில்லாச் சனக்கும்பல் கிறிஸ்து சிலுவையில் தொங்கும் காட்சியைக் காணத் துடிக்கிறது. ஆனால் கல்வாரி சேருமுன் கிறிஸ்துவின் உடல் செயலற்று விட்டது. சீமோன் உதவி தேவைப்படுகின்றது.......

கிறிஸ்துவின் சிலுவை சுமக்க, வீரனின் விருதுக் கொடிதாங்க, கிடைக்கும் பாக்கியம்தான் என்னே!

இச்சேவைக்கு நான் தெரியப்பட்டிருந்தால் நான் மகிழ்ச்சி அடைந்திருப்பேனா? என் அன்றாட வாழ்க்கையில் மறுகிறிஸ்துக்களாகிய என் சகோதரர் தங்கள் வாழ்வில் துன்பச் சுமையில் வருந்துகையில் நான் கைக்கொடுத்து உதவச் சந்தர்ப்பம் இருந்தும் பாரா

திருநிலை 06

### இயேசுவின் முகத்தை ஓர் பெண் துடைக்கிறாள்

கூக்குரலிடும் கும்பலைப் பொருட்படுத்தவில்லை அப்பெண். பைத்தியக்காரன் எனப்பட்ட கிறிஸ்துவுக்குப் பரிவும் பாசமும் காட்டத் துணிகிறாள் அந்த வீரமங்கை. இத் துணிவுக்குப் பிரதிபலன்; துடைத்த துணியில் இயேசுவின் திருமுகம்; இதுவன்றோ பிரதி அன்பு.

எனக்கோ கிறிஸ்துவுக்குப் பகிரங்கமாகப் பிரமாணிக்கம் காட்ட வெட்கம்.

கிறிஸ்துவின் போதனை மூடத்தனமானவை என்று பிறர் சொல்வதைக் கேட்டும் நான் பேசா மடந்தையாகின்றேன்.

திருநிலை 07

### திரும்பவும் இயேசு கீழே விழுகின்றார்

விழுந்த கிறிஸ்து எழுந்து நிற்கத்
துணை செய்வார் யாருமில்லை.
தவறி விழுந்த என் சகோதரன்
திருந்தி நடக்க உதவுவது
விழுந்த கிறிஸ்து எழுந்து நடக்க
கைகொடுத்து உதவுவது போலல்லவா!
பாவத்தையன்றி, பாவியைப் பழியாதே!
மாறாக, பாவிக்குப் பரிவும் பாசமும் காட்டு.

திருநிலை 08

### எருசலேம் பெண்கள் இயேசுவுக்காக அழுகின்றனர்

கிறிஸ்துவைப்போல் துன்பப்பட்டவர் யாருமில்லை; அவரைப்போல் ஆறுதல் அளிப்பவரும் யாருமில்லை; கிறிஸ்துவைப்போல் ஆழ்ந்த அன்பை ஈந்தவர் யாருமில்லை; கிறிஸ்துவைப்போல் இதயத்தை இதமாக ஈர்க்கக் கூடியவரும் யாருமில்லை; கிறிஸ்து வைப்போல் தன்னலம் கருதாத் தியாகி யாருமில்லை. நான் என் ஆறுதலுக்காக அலைகின்றேனா? அயலாருக்கு ஆறுதல் அளிக்கின்றேனா? அன்பை அளிக்கின்றேனா?

நம்பி வாழ்கின்றேனா?
நம்ப வாழ்கின்றேனா?

திருநிலை 09

### மூன்றாம் முறையாக இயேசு கீழே விழுகின்றார்

தீய சோதனைகளின் சுமையின் கீழ் அழுந்துவோர் பலர். அவர்கள் எழுந்திருக்க நான் உதவும் ஊன்றுகோலாகின்றேனா?

அன்றேல் அவர்களை இகழ்கின்றேனா? அவர்கள் தீயோர் என்று தீர்ப்பிடுகின்றேனா? தீர்ப்பிடுவது இறைவன் செயல் அல்லவா?

காலாதிகாலத்திற்கும் மாறாத மாசுகற்பிக்கும் குற்றங்களைப் புரிதல் எவ்வளவோ எளிது. ஆயினும், பிறர் செயல்களில் பிழைகண்டும் பிறரன்புடன் வாழ்வேனாக.

திருநிலை 10

### இறைமகன் இயேசுவின் ஆடைகளை அகற்றுகின்றனர்

பட்ட அடிகளினால் ஏற்பட்ட புண்கள்; அதில் ஒட்டிக் காய்ந்திருந்தது அவரது ஆடை. அது இழுத்து உரியப்படுகையில், ஆறாப் புண்கள் அகல விரிகின்றன.

என் ஆன்மாவே! இதுவே உன் சரீர இச்சையினால் நீ கிறிஸ்துவுக்கு அளித்த சன்மானம். அடக்கமின்மை, ஆடம்பரம், ஆபாசம், இழிந்த வாழ்க்கை, ஈன நடத்தை, உல்லாசப் பிரியம் இவற்றில் எக்குற்றத்தில் நீ ஊறித் திளைத்திருக்கின்றாய்.

திருநிலை 11

### சிலுவையில் இயேசு அறையப்படுகின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசீர் அருளி அபயமளித்த கரங்கள்; குஷ்டரோகிக்கு குணமளித்த கரங்கள்; மனமாறிய

அன்பினால் அனைவரையும் அரவணைத்த கரங்கள், அந்தோ! அவற்றிற்குக் கிடைத்த பரிசு, கூரிருப்பு ஆணிகளோ! கருணை வழங்க காடும் மேடும் நடந்த பாதங்கள், பாவியைத் தேடிப் பதைத்தலைந்து புண்ணான பாதங்கள், நன்மையே செய்ய நாடெல்லாம் நடந்த பாதங்கள், இவைக்குக் கிடைத்த சன்மானம், கொடிய ஆணிகளோ! பொல்லாதவன் எனும்போதும், புகழப் படாதபோதும் நான் கவலைப்படுவது ஏனோ? பிறர் போற்றப்படும் போதும், புகழப்படும்போதும் நான் பொறாமைப்படுவதும் ஏனோ? சிலுவையில் தொங்கும் சீவனைப் பார்! போற்றப்பட வேண்டியவர் போற்றப்பட்டாரா? புகழப்பட வேண்டியவர் புகழப்பட்டாரா?

திருநிலை 12

### சிலுவையில் இயேசு பலியாகிறார்

சிலுவையில் இயேசு மும்மணி நேரம். அவர் வாயில் இருந்து வெளிவந்த வார்த்தைகளோ, அன்பின் அருள் மொழி யன்றி வேறில்லை. துன்ப வேதனையிலும் அன்பு மொழிகளோ! தகிக்கும் வெயிலிலும் தாக மொழிகளோ! அந்தரித்த வேளையிலும் அருள் மொழிகளோ! கடைசி வேளையிலும் கருணை மொழிகளோ! மரிக்கும் வேளையிலும் மதுர மொழிகளோ!

நான் என் உள்ளத்தை உற்றுப்பார்த்தால்
அன்பனே! எவ்வளவு வித்தியாசம்!
ஒப்பிட்டுப்பார்.......
உன் உள்ளத்தை அவர் உள்ளத்துடன்.

திருநிலை 13

### வியாகுலமரியின் மடியில் மரித்த மைந்தன் இயேசு

மெல்லியலாள் மரியாள் மாதருள் வீரமங்கை. அவர் மௌன துயர சிந்தையைச் சிலையாக்கக் கூடுமானால் அதற்கு நிகரான மனோபலம், மதுர அன்பு, துயர சிந்தையுடைய வேறோர் பெண் உருவைக் காணவும் முடியுமோ?

திருநிலை 14

### கல்லறையில் இயேசுவின் உயிரற்ற உடல்

அயலவர்கள் துயர்களைந்த புனிதர்கள், உன் மத்தரை உத்தமராக்கிய இனிய புனிதர்கள், புண்ணியத்தின் எழிலுக்கும் கவர்ச்சிக்கும் உருவம் தந்து உயிரூட்டிய புனிதர்கள் கிறிஸ்துவின் அன்பு பலரையும் ஈர்க்கத் துணைநின்ற புனிதர்கள்; கிறிஸ்துவின் அன்பை, மன்னிப்பை, மதுரத் தன்மையை, அவரின் தயாள குணத்தை வாழ்ந்து காட்டிய புனிதர்கள்.

திருநிலை 15

### மரித்த இயேசு உயிர்க்கிறார்

கிறிஸ்துவின் உயிரற்ற உடலை மண் தீண்டவில்லை. படைத்தவரை அது பகைக்க வில்லை. சாவை வென்ற சத்தியன் உரைத்தபடியே உத்தானமாகின்றார்.

நானே ஒளி; நானே வழி; நானே உத்தானம் என்ற உண்மை உரைக்கு உயிர் கொடுக்கின்றார்.

கோதுமைமணி நிலத்தில் விழுந்து மடிந்தால் ஒழிய அது பலன் கொடாது. சத்தியத்திற்கு சான்று பகர்வோனுக்கு வாழ்வு மாறுபடுகின்றதேயன்றி அழிக்கப்படுவதில்லை, உண்மையற்ற உலகை உடலை ஊனியை வென்றாலொழிய சத்தியத்திற்குச் சான்று பகர்ந்து கிறிஸ்துவாக மகிமை பெருமை பெறமுடியாது



# நாம் வழிதவறாமல் இருக்க எமக்கு உதவுங்கள் தும்பளை கருத்தரங்கில் இளைஞர் வேண்டுகோள்

நாம் நேர்மையான, தூய்மையான இளைஞர் சமுதாயம் படைக்க விரும்புகிறோம். எம்மை வழி நடத்துங்கள் நாம் வழி தவறிடாமல் இருக்க எமக்கு உதவிசெய்யுங்கள் இவ்வாறு தும்பளை மரியன்னை ஆலய இளைஞர் கருத்தரஙகில் பங்குபற்றிய இளைஞர் – யுவதிகள் அங்கிருந்த குருக்கள், பெற்றோர், பெரியோரைப் பார்த்து வேண்டுகோள் விடுத்தனர். அருள் தந்தையர்கள் கிருபாகரன், ஜெபரட்ணம் ஆகியோரால் மேற்படி கருத்தரங்கு நெறிப்படுத்தப்பட்டது.

இளைஞர்–யுவதிகள் தவறுவதற்கான காரணங்களை இளையவர்கள் என்ற குறும்படத்தின் பின்னணியில் ஆராய்ந்து பின்வரும் தொகுப்பு அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

- இளைஞர்களை வழிநடத்துவதில் பெற்றோர் கூடிய அக்கறையும், ஆர்வமும் காட்டாமை.
- சமுதாயத் தலைவர்களின் நெறிப்படுத்தல் போதாமை.
- சமுதாயத்தில் வாழும் ஏனைய இளைஞர்களின் தவறான வாழ்க்கைமுறை.
- சிறுபிராயத்தில் ஆளுமைப் பண்புகளில் ஏற்பட்ட வழி நடத்தலின் தாக்கங்கள்.
- நல்வழிப்படுத்தாத திரைப்படங்கள்.
- இளைஞர்களின் எதிர்கால வாழ்வை நெறிப்படுத்தும் பொருத்தமான கல்வி, மற்றும் சமூக விழுமியங்களில் உள்ள குறைபாடு
- இளைஞர்களின் மீது செலுத்தப்படும் பலவந்தமான பொறுப்புக்கள், கட்டளைகள்.
- பெற்றோர், பிள்ளைகளிடையே புரிந்துணர்வு போதாமை.
- இளைஞர்களின் அடிப்படைத்தேவைகளை பெற்றோர் பூர்த்தி செய்யாமை.
- தேவையற்ற ஆடம்பர வாழ்வில் ஈடுபாடு.
- இளைஞர்களின் உளப்பண்புகளை நெறிப்படுத்தும் அறிவுரைகள் பெற்றோர் வழிகாட்டலில் பெறப்படாமை.
- நண்பர்களின் தோழமையை தவறான நெறியில் பயன்படுத்தி நெறிதவறும் தன்மை.
- திருச்சபையின் பணிகளில் பங்கேற்க பெற்றோர் ஊக்குவிக்காமை.
- ஏனைய இளைஞர்களோடு இணைந்து பணியாற்றும் விருப்பமின்மை.
- வழிகாட்டிகளின் அறிவுரைகளைப் புறக்கணித்தல்.

இருபத்தைந்து இளைஞர் யுவதிகள் பங்குபற்றிய மேற்படி கருத்தரங்கு பங்குத் தந்தையர்களால் ஒழுங்கு செய்யப்பட்டது.

*– ஜெபா –*

## திருக்குடும்ப கன்னியரின் புதிய மாகாண முதல்வர்

அண்மையில் திருக்குடும்ப கன்னியர் சபையின் மாகாண முதல்வருக்கான தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட போது அருள்சகோதரி அன்சில்லா ஜேம்ஸ் மாகாண முதல்வராக அறிவிக்கப்பட் டுள்ளார். மாகாண பொருளாளராக கிறிஸ்ரலின் ஒக்கசும், மாகாண ஆலோசகர்களாக ஸ்ரெல்லா துரைசாமி, அனக் கிளேற் எக்கார்ட்டர், அருள் மத்தேயுசுபிள்ளை, பொன வெஞ்ச இம்மானுவேல் ஆகியோர் தெரிவுசெய்யப் பட்டனர்.

## சிலுவையின் வழி சீவியம்

1970ம் ஆண்டு நவம்பர் மாதம் 1ம் திகதி யாழ். மறை மாவட்ட துணை ஆயராயிருந்த வீ.இ. அன்ரனி ஆண்டகையின் அனுமதியுடன் வெளிவந்த சிலுவையின் வழி சீவியம் என்ற சிலுவைப் பாதை நூலின் 3வது பதிப்பு விற்பனைக்கு வந்துள்ளது.

யாழ். அடைக்கல் அன்னை ஆலயத்தின் வெளியரங்க சிலுவைப் பாதைப் படங்களுடன் இந் நூலினை ம.இ. பயஸ் அடிகளாரும் எஸ். எம். ஜோசப்பும் இணைந்து வெளியிட்டுள்ளனர்.

இந்த சிலுவைப் பாதையின் 14 நிலைகளையும் இப் பாதுகாவலனில் காணலாம்.

• இச் சிலுவைப் பாதையின் இறுதியில் வாழ்க்கையின் வெவ்வேறு நிலையிலுள்ளவர்கள் தனித்தும் ஒருமித்தும் சிந்திக்கக்கூடிய 10 வழிகாட்டிக் குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன.

# பிரான்சிஸ்கன் சபையின் தவக்கால ஞானஒடுக்கம்

பொதுநிலைப் பிரான்ஸ்சிஸ்கன் சபையினரின் தவக்கால ஞானஒடுக்கம் 10.03.2001 அன்று யாழ். மரியன்னை பேராலயத்தில் சபையின் ஆன்மீக இயக்குனரும், யாழ். மறைமாவட்டக் குருமுதல்வருமான ஜே.பி.ஈ. செல்வராஜா அடிகளாரின் நற்கருணை எழுந்தேற்றத்துடன் ஆரம்பமானது.

அடிகளார் தமது தியான ஆரம்ப உரையில் இறைவனின் நன்மைத் தனங்களைப் பெற்றுக்கொள்ள உறவுகளை வளப்படுத்தி நொறுங்கிய உள்ளத்துடன் பாவவாழ்வை விட்டு இறைவனை நோக்கி பயணிக்க அழைப்பு விடுத்தார். எஸ்.ஏ. பொன்சியன் அ.ம.தி அடிகளார் பொதுநிலைத் துறவிகளுக்கும் ஆன்மீக இரட்சணியம் அவசியம் என்பதை உணர்த்தி அவர்களது செப, தப, பணிவாழ்வு அன்பிலே கட்டி எழுப்பப்பட வேண்டும் என்றார்.

நற்கருணைப் பிரசன்னத்தில் ஆழ்நிலை தியானத்தில் நாம் தொடர்ந்து பயணிக்க அருள்சகோதரி ஒஸ்ரின் தி.கு அவர்களின் நெறிப்படுத்துதலில் நடைபெற்ற மௌன தியானம் பயனுள்ளதாக அமைந்தது.

ஈற்றில் நற்கருணை ஆசீர் தியாக்கோன் எஸ். ஏ. றொசான் அவர்களால் வழங்கப்பட்டது. மாலை திருச்சிலுவைப் பாதைத் தியானமும் அதனைத்தொடர்ந்து சிறிய குருமட அதிபர் அ. லோறன்ஸ் அடிகளாரினால் குணமாக்கல் வழிபாடும் திருப்பலியோடு கூடிய குணப்படுத்தல் ஆசீரும் வழங்கப்பட்டது.

சபையின் இயக்குநர் தமது இறுதி உரையில் நாம் பெற்ற புதுவாழ்வு ஏனையவர்களுக்கு வழிகாட்டவும் முன் மாதிரிகையான வாழ்வு கிட்டவும் ஆசித்து ஞான ஒடுக்க இறுதி ஆசியுரை வழங்கினார். இவ் ஞான ஒடுக்கம் திறம்பட ஆன்மீக ரீதியில் ஒவ்வோருவருக்கும் பயணிக்க அருள்புரிந்த இறைதந்தைக்கும் அதேவேளை பல சிரமங்கள் மத்தியில் இவ் அரிய ஞான ஒடுக்கத்தை ஒழுங்கு செய்த சபைத் தலைவர் எல்.சி.நீக்கிலஸ் (பப்பாவுக்கு) நன்றி கூறப்பட்டது.

*சகோதரி சூ.மேரி இராஜேஸ்கனி*
*அங்.. எண் 555*

# சமாதான நற்கருணை வழிபாடு

பொதுநிலைப் பிரான்ஸ் சிஸ்கன் சபையினரால் நாட்டின் சமாதானத்துக்காக மாதத்தின் மூன்றாம் ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 3.15 மணி முதல் 5.00மணிவரை சபையின் ஆன்மீக இயக்குநரும் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வருமான ஜே.பி.ஈ. செல்வராஜா அடிகளாரின் ஆலோசனையுடன் அருள் ஆச்சிரமத்தில் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. பங்குபற்ற விரும்புவர்கள் இணைந்து செபிக்கலாம்.

*எல்.சி. நீக்லஸ் (பப்பா)*
*சபைத் தலைவர்*

# நாவாந்துறைப் பங்கில்

நாவாந்துறைப் பங்கில் புனித பரலோக அன்னை ஆலயத்தில் இடம்பெற்ற திருப்பாலத்துவ சபைத் தின நிகழ்வில் 150 வரையிலான பாலகர்கள் கலந்து கொண்டார்கள்.

அன்றைய தினம் ஞாயிறு திருப்பலி இவர்களுக்காக விசேடமாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதனை சகாயநாயகம் அடிகளார் பங்குத் தந்தையுடன் இணைந்து நிறைவேற்றினார். அவர் தமது மறையுரையில் ''சிறுவர்கள் மனுக்குலத்தின் நம்பிக்கையின் அடையாளம். சீரழிந்து போகும் மண்ணில் சிறுவர்கள் தான் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றார்கள்.சிறுவர்களை பாதுகாத்து வழி நடத்தவது திருச்சபையினதும், பெற்றோரினதும் பாரிய கடமை என்பதை மறந்துவிட முடியாது'' என்றார்.

தொடர்ந்த ஒன்றுகூடலில் பங்குத்தந்தை அருள்திரு பீற்றர் துரைரட்ணம் அருள்திரு சகாய நாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திருச்சிலுவை மருத்துவமனை யாழ் நகரில்

கடந்த ஆண்டு மே மாத இடப்பெயர்வுகள் காரணமாக இடம்பெயர்ந்து பண்டத்தரிப்பு சந்திக்கு அண்மையாக சில்லாலை பிரதான பாதையில் இயங்கிவந்த திருச்சிலுவை மருத்துவமனை மீண்டும் இம் மாதம் 5ம் திகதி முதல் யாழ் கடற்கரை வீதியில் உள்ள தமது சொந்தக் கட்டடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

## புதிய நூற்றாண்டினுள் பயணம் செய்தல்

என்ற தலைப்பில் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையானது புத்தாயிரமாண்டு திருமடல்ஒன்றினை வெளியிட்டுள்ளனர். இதன் தமிழாக்கப் பிரதிகள் யாழ். நகருக்கு இன்னும் வந்து சேரவில்லை.

## பலாலியில் நற்சிந்தனை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுதாபனத்தின் பலாலி சேவையினர் கத்தோலிக்க நற்சிந்தனைகளை ஒலிபரப்ப முன்வந்துள்ளனர். யாழ். மறைமாவட்ட சமூகதொடர்பு சாதன ஆணைக்குழவினால் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் இந் நிகழ்வில் குருக்கள், கன்னியர்கள், சகோதரர்கள், பொது நிலையினர் ஆகியோர் 4 சிந்தனைகளை எழுதி முதலில் எமக்கு அனுப்பிவைக்கவும். தரமானவற்றிற்கு குரல் கொடுப்பதற்காக தபால் மூலம் உங்களோடு தொடர்புகொள்வோம்.


மாதம் ஒரு அரை மணி நேர கத்தோலிக்க நிகழ்ச்சியினை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளமையினால் மறைமாவட்ட ஆணைக்குழுக்களின் தலைவர்களிடமிருந்து அரை மணி நேர நிகழ்வு வேண்டப்படுகின்றது. பிரதியினை ஆயத்தம் செய்தவுடன் அறிவித்தால் ஒலிப்பதிவு ஒழுங்குகள் செய்யப்படும்.

## கச்சதீவுத் புனித அந்தோனியார் திருநாள்

இம்மாதம் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கச்சதீவினில் திருநாள் ஒன்றினைக் கொண்டாட நெடுந்தீவுப் பங்குத்தந்தை மென்போட் அடிகளார் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார். கடந்த 12 ஆண்டுகளாக திருநாள் கொண்டாடப்படாது உள்ள மேற்படி ஆலயத்தில் கடந்த ஆண்டும். திருநாள் கொண்டாட்ட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டாலும் இறுதி நேரத்தில் நாட்டு நிலைமை காரணமாக அது கைவிடப்பட்டது.

1988ம் ஆண்டின் பின்னர் சிறியளவில் கொண்டாடப்படவுள்ள கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவில் கலந்துகொள்ள குருக்கள், கன்னியர், பொது நிலையினர் அடங்கிய 100 பேருக்கு கடற்படையினர் அனுமதியை வழங்கியுள்ளனர்.

# அமதிகள் பயிலகத்தில் இயூஜின்



கடந்த 150 ஆண்டுகளாக அமலமரித் தியாகிகள் யாழ். மண்ணில் பணியாற்று [illegible] கோழியு அமலமரித் தியாகிகள் சபையின் நிறுவுனர் புனித இயூஜின் டீ மார்சினட்டின் 6அடி உயர உருவச் சிலை ஒன்று கொழும்புத்துறை அமலமரித் தியாகிகள் டீ மார்சினட் பயிற்சியகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

இச் சிலையினை பிரபல ஓவியர் சிவப்பிரகாசம் யார்த்துள்ளார்.

யாழ்ப்பாண மண்ணில் அமலமரித் தியாகிகள் 150 ஆண்டுகளாக பணியாற்றியதை நன்றியோடு நினைவுகூர்ந்து இப் பெரிய சிலையினை நிறுவ முன்வந்ததாக ஜீவாபோல் அடிகளார் காவலனுக்குக் கருத்துத் தெரிவித்தார்.

புனித இயூஜின் டீ மார்சனட்டுக்கு இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள மிகப் பெரிய சிலை இதுவாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூசையப்பர் ஏன் புனிதர்?

மூலம் : கார்ல் ரானர்

**கடமைக்கும் அதை ஆற்றுவதற்கும் வேண்டிய புனிதத் தன்மைக்கும் உள்ள உறவைக் கொண்டு புனித சூசையப்பருடைய தூய்மையை ஆராய்கின்றார் இறையியலாளர் கார்ல் ரானர். இக்கட்டுரை அவ்வாராய்ச்சியை முற்றும் தழுவியமைந்துள்ளது - ஒருவகையில் தமிழாக்கம் என்றே சொல்லலாம். புனித சூசையப்பருடைய திருநாளையொட்டி பாதுகாவலன் வாசகர்களின் நன்மை கருதி எஸ். ஈ. என். குணசீலன் அடிகள் தயாரித்த இக் கட்டுரையை பிரசுரிக்கிறோம். வாசித்துப் பயனடையுங்கள். (ஆர்)**

இன்று திருச்சபை புனித சூசையப்பரை வெகுவாகப் புகழ்கின்றது. ஆடம்பரத்துடன் போற்றுகின்றது இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் அவரது பெயரையும் திருப்பலி முறையில் சேர்த்துள்ளது. இவ்வாறு அவரைப் புகழத்தகுந்த காரணம் என்ன? என்ற வினா எழுவது இயல்பே.

சூசையப்பர் நம் ஆண்டவரின் வளர்ப்புத் தந்தை. இறைவனின் அன்னையாகிய கன்னி மரியின் கணவர் என்பனவெல்லாம் தக்க காரணங்களாகா. இயேசுவுடன் ஒருவர் எவ்வளவு நெருங்கிப் பழகுபவரானாலும் இரத்தத்தொடர்பே கொண்டிருப்பவரானாலும் அவர் புனிதர் என அழைக்கப்படும் தகுதியை பெறமாட்டார் என்பதை நற்செய்தி காட்டுகின்றது. எடுத்துக்காட்டாக யூதாஸ் இயேசுவுடன் மிக நெருங்கிப் பழகியவன்தான்: திருச்சபை அவனது பெயரையும் புனிதர் பட்டியலில் சோர்க்கவில்லை

## கடமையும் புனிதத் தன்மையும்

சிற்சில சமயங்களில் ஒருவரது வெளிப்படையான கடமைகளிலிருந்து அன்னாரது உள்ளத்தை அறிய முடியும். மீட்புத்திட்டத்திலும், நாம் இம் முறையை அளவோடு கையாளலாம். ஒருவர் வெளிப்படையான ஒரு வேலையை செய்கிறார். அவ் வேலையை செவ்வனே செய்திட உள்ளத் தூய்மை நிறைந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகத் தெரிகிறது. அத்தகையதொரு வேலை ஒருவருக்குள்ளது என இறைவனே காட்டுகிறார் என்றால், அதிலிருந்து அன்னாருடைய புனிதத் தன்மையை நாம் ஜயமின்றி அறிந்துகொள்ளலாம்

இத்தகையதொரு வேலை கன்னி மரியாளுக்கும் அப்போஸ்தலர்களுக்கும் இருந்தது என்பது வெள்ளிடைமலை. இதே போன்ற வேலை புனித ஸ்நாபக அருளப்பருக்கும் இருந்தது என்று உணர்ந்த திருச்சபை அவரது திருநாளை வெகுசிறப்பாக கொண்டாடியது. மீட்பு வேலையில் ஸ்நாபக அருளப்பருக்கு இருந்த வேலையை நாமும் தெளிவாக அறிகிறோம். இதுபோல் புனித சூசையப்பருக்கும் வேலை ஏதேனும் இருந்ததா?

இது பற்றி நற்செய்தியை நாம் ஆராய்ந்தால் அங்கு அவரைப்பற்றி நாம் அறிவது வெகு சிறிதே. அந்த ஒரிரு செய்திகளும் அவர் தம் வேலை பற்றி ஒன்றும் கூறா. சூசையப்பர் இயேசுவுடன் நெருங்கிய தொடர்புடையவர் என்பது முற்றும் உண்மை. ஆனால் இயேசுவின் சகோதர சகோதரிகள் எல்லாரையும் புனிதர் என்று போற்றாத திருச்சபை சூசையப்பரை ஏன் புனிதர் எனப் போற்றுகின்றது?

புனித மத்தேயுவின் நற்செய்தி (1:18–25) என்ன கூறுகிறது என்று பார்ப்போம்.

**18: இயேசு கிறிஸ்து தோன்றியது பின்வருமாறு: அவருடைய தாய் மரியாளுக்கும் சூசைக்கும் மண ஒப்பந்தமாயிருக்க அவர்கள் கூடிவாழும் முன் பரிசுத்த ஆவியால் அவள் கருத்தாங்கியிருப்பதாக தெரிந்தது.**

**19. அவள் கணவர் சூசை நீதிமானாயும், அவளைக் காட்டிக்கொடுக்க மனமில்லாதவராயும் இருந்ததால் அவளை**

**20. மறைவாக விலக்கிவிட வேண்டும் என்றிருந்தார். இதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில் இதோ! ஆண்டவரின் தூதன் அவருக்குக் கனவில் தோன்றி "சூசையே தாவீதின் மகனே, உம்முடைய மனைவி மரியாளை ஏற்றுக்கொள்ள அஞ்சவேண்டாம்.**

**21. ஏனெனில் அவள் கருவுற்றிருப்பது பரிசுத்த ஆவியால்தான். அவள் ஒரு மகனைப் பெற்றெடுப்பாள். அவருக்கு யேசு என்று பெயரிடுவீர். ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்" என்றார்.**

**22, 23. "இதோ! கன்னி கருத்தாங்கி ஒரு மகனைப் பெற்றெடுப்பாள், அவருக்கு எம்மானுவேல் என்று பெயரிடுவர்" என்று ஆண்டவர் தீர்க்கதரிசி வாயிலாகக் கூறியது நிறைவேறவே இவையனைத்தும் நிகழ்ந்தன. எம்மானுவேல் என்றால் "நம்மோடு கடவுள்" என்பது பொருள்.**

**24. சூசை விழித்தெழுந்து, ஆண்டவரின் தூதன் தமக்குக் கட்டளையிட்டவாறு தம் மனைவியை ஏற்றுக்கொண்டார்.**

**25. அவள் தன் தலைப்பேறான மகனைப் பெற்றெடுக்கும்வரை அவர் அவளை அறியாதிருந்தார். அவருக்கு இயேசு என்று பெயரிட்டார்.**

## பரிசுத்த ஆவியால்

கன்னிமரி கருவுற்றிருப்பதைச் சூசையப்பர் கவனிக்கிறார். ஆயினும் அதற்கான காரணத்தை அவர் கேட்கவில்லை. மரியாளும் தானாகவே கூற முன்வரவில்லை. எனவே மறைமுகமாக அவளை இந்த இக்கட்டினின்றும் விடுவிக்க முயல்கின்றார் அவர். இக் கருத்துப்பற்றி ஏன் இருவரும் மௌனமாய் இருந்தனர், ஏன் சூசையப்பர் மரியாளை விலக்க, அதுவும் மறைவாக விலக்க எண்ணினார் என்பவற்றைத் தெளிவுபடுத்த வந்த விவிலிய ஆய்வாளர்கள் உயர்ந்தோர் உள நூலையே படைத்துள்ளனர்.

ஆனால் இவ்வாறெல்லாம் விவாதிப்பது சரியா? மூலபாடத்தை நோக்கினால் "பரிசுத்த ஆவியால்" மரியாள் குழந்தையோடு காணப்பட்டாள் என்பது தெளிவாக அங்கு உள்ளது. இதிலிருந்து சூசையப்பரும் அதைக் கண்டிருப்பார் என்பதும் பெறப்படும், எனினும் சிலர் இங்கு மூல பாடத்தையே திருத்துகின்றனர். வான தூதன் வழியாகத்தான் சூசையப்பர் இக் கரு பற்றியறிவார் அதற்கானதொரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டியே திரு ஆசிரியர் "பரிசுத்த ஆவியால்" என்னும் தொடரை நுழைத்துள்ளார் என்று மொழிகின்றார்கள் இவர்கள்.

மூலபாடம் என்ன சொல்லுகின்றதோ அதையே அது குறிக்கின்றது என நாம் கொண்டால், நாம் அறிவது இதுதான்: சூசையப்பர் மரியாளின் நிலைகண்டு அவளை வினவுகிறார் : மரியாள் விடையிறுக்க, புனித ஆவியினால் அவள் கருத்தரித்துள்ளார் என்பதை அறிகின்றார். இத்தகைய வழிதானே மணமாகவிருக்கும் தம்பதிகளிடையே நிலவவேண்டும்? தாம் நேசிக்கும், நம்பும், மனைவியிடம் நேரிலேயே சூசை கேட்கின்றார். மரியாளும் பிறரது உதவியைத் தேடாது தானாகவே கூறுகின்றாள் எனக் கொள்வது தானே தகுதி உடைத்து?

## வானதூதன்

மரியாள் தான் கருவுற்றிருப்பதை சூசையப்பர் அறிவார் என்று உணர்ந்துள்ளார். அவருடைய மனைவியாக அவள் அவளுடன் வாழ வேண்டும் என்றால் சூலிற்கான காரணத்தை அவரிடம் அவள் கூறக் கடமைப்பட்டுள்ளாள். அத்தகைய காரணம் பெற அவருக்கு உரிமையுண்டு என்பதையும் அவள் அறிவாள். பிற பெண்களைப் போலவே வாழ்ந்து வரும் அவள் தன்னிடம் அமைந்துள்ள சூலிற்குக் காரணம் யாது என்பதைத் தன் கணவரிடம் தெரிவிக்க ஒரு புதுமையை வேண்டி நிற்கவில்லை. ஆனால் வானதூதன் வழியாக சூசையப்பர் நிலைமையை அறிகிறார் என்று நாம் திருமறை நூலில் அறிகிறோம். உண்மைதான் இருப்பினும் வானவனின் செய்தி மூலமே சூசையப்பர் இச் சூலினைப் பற்றி முதன்முதலாக அறிகிறார் என்றுதான் நாம் கொள்ள வேண்டுமா?

மரியாள் மூலமாக அவர் அறிந்த ஏதோ ஒன்றை வானவனின் வருகை நிலை நிறுத்துகிறது என்று ஏன் நாம் கொள்ளலாகாது. நமது முழு விசுவாசத்தையும் கேட்கின்ற இந் நிகழ்ச்சிக்கு இரு சான்றுகள் அதிகம் எனலாமோ. ஒருக்கால்லும் இல்லை. ஆகவே குழந்தையின் தெய்வீகப் பிறப்புப் பற்றி தம் கனவிற்கு முன்னமேயே சூசையப்பர் அறிவார். இவ்வாறு 18வது வசனம் கூறுகிறது, எனக்கொண்டால் அதனை 20வது வசனம் மறுத்துரைக்காது.

## அவளை மறைவாக விலக்கிவிட

அடுத்தபடியாக, மரியாளை ஏன் மறைவாக விலக்கிவிடச் சூசையப்பர் விரும்பினார்? இக் கருவுடன் நெறியற்ற நிலை கூடியிருந்தால் ஏன் மறைவாக விலக்கவேண்டும்? அவர் ஒரு "நீதிமானாக" இருந்ததாலா? ஒரு நீதிமானின் உள்ளம் எழுதப்பட்டுள்ள சகல சட்டத்தையும் நிறைவேற்றுவதில் முனைந்திருப்பது போல் முனைந்திருந்ததாலா? அப்படியானால் சட்டம் கூறுவதென்ன? கூடா ஒழுக்கத்திற்கும் நெறியற்ற தன்மைக்கும் இவ்வாறு மறைவாக விலக்குவதைத்தான் சட்டம் காட்டுகிறதா?

ஆனால் சூசையப்பர் கன்னிமரியின் ஒழுக்கம் பற்றிக் கடுகளவேனும் ஐயம் கொள்ளவில்லை. அதேவேளையில் இக் கருவிற்குப் புதுமையான காரணம் பற்றிய அறிவும் அவருக்கு இல்லை, என்றால் இச் சூலிற்குக் காரணமே இல்லை என்றல்லவா சொல்லியிருப்பார். அங்ஙனமாயின் இவ்வாறு மறைவாக விலக்குவதால் அவர் வாழ்வின் சிக்கலிலிருந்து ஓடியிருப்பார். சாதாரணக் கேள்வி என்றால் தீர்ந்திருக்கக்கூடிய கேள்வியினின்றும் காத தூரம் போயிருப்பார். தம் ஐயத்தைத் தீர்க்கக் கடவுளையே முற்றும் நம்பியிருந்தார், சூசையப்பர் என்று கூறுவதும் சரியல்ல. கடவுளை நாடு முன் ஒருவன் தன்னிடமுள்ள சகல வழிகளையும் கையாள வேண்டும். அவ்வாறு செய்தும் வழிகாணாவிடில் அவன் கடவுளை நாடுதல் நேர்மையுடைத்து. சூசையப்பரும் நேர்மையானவர் என்று விளங்க வேண்டுமானால் அவர் மரியாளை முதலில் கேட்டிருக்க வேண்டும். அப்படியில்லாவிட்டால் மரியாளை மறைவாக விலக்க அவர் திட்டமிட்டதை ஒருபோதும் விளக்கமுடியாது.

இப்போது அவர் அந்தச் சூலமைவு பற்றி அறிவார் எனக்கொண்டு, அந்த அறிவு அவருடைய நடத்தையை விளக்க உதவுமா என ஆராய்வோம். பரிசுத்த ஆவியால் கன்னி கருத்தாங்கியுள்ளாள் என்பதைச் சூசையப்பர் அறிகிறார். எப்படிப்பட்ட செயல்களை இறைவன் இவளுக்குச் செய்துள்ளார் என்பதை மரியாள் கூறக் கேட்கும் இவர் எண்ணம் என்னவாயிருக்கும்? "என் மனைவி மேல் எனக்கு உரிமையில்லை; வானகம் இப்பெண்ணிடம் உரிமை கொண்டாடுகிறது; நான் ஒரு நீதிமானானால் இவ்விடம் நின்று நீங்க வேண்டும்" அப்படி அவர் நீங்குவது அவளுக்குப் பழி உண்டாகலாம். எனவே மறைவாக அதைச் செய்யவேண்டும்.

இப்படி விலக்குவதால் மரியாளுக்கோ குழந்தைக்கோ யாதொரு தீங்கும் ஏற்பட அவர் விரும்பவில்லை. மாறாக அவளைக் காக்கவே அவர் எண்ணுகிறார். இதை நற்செய்தி நன்றாக உணர்த்துகிறது.

மேலும் கடவுள் தமக்கென்று தேர்ந்தெடுத்துள்ள பெண்ணிடம் உரிமை ப்பாராட்டவில்லை. சூசையப்பர் தம் மண உறுதிக்குள் பிறந்த குழந்தை மேல் தமக்குத் தந்தைக்குரிய உரிமைகள் இருந்தும் அவைகளைப் பற்றி அவர் நினைக்கவில்லை. அதற்கெதிராக அவர் அவ்விடம் நின்று நீங்கவே முயல்கிறார்.

## வெளியரங்க நியமனம்

ஆனால் வானதூதன் வழியாக அவர் அங்கேயிருக்க வேண்டும் எனக் கட்டளை பிறக்கிறது. குழந்தையின் தெய்வீகப் பிறப்புப் பற்றி மட்டும் கூறவரவில்லை. வானவன், இந்தக் கன்னியின் கணவராக, குழந்தையின் தந்தை ஆகச் சூசையப்பரை நியமிக்கின்றார். திடீரெனத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மீட்பு நாடகத்தில் நடு இடம் பெறுகிறார் சூசையப்பர். நமக்காக உலக மீட்பரைக் காக்கும் பொறுப்பை அவர் விண்ணிலிருந்து பெறுகிறார். மேலும் அவர் தாவீதின் மகனானார் ; எனவே அவர் மகனான இயேசுவும் தாவீதின் மகனானார். தாவீதிற்கு கொடுக்கப்பட்ட வாரிசாகிறார். எனவே நம் ஆண்டவருடைய "சகோதர சகோதரிகள்" கொண்டிருந்த இயல்பான உறவுபோன்ற ஒன்றன்று சூசையப்பர் இயேசுவுடன் கொண்டிருந்த உறவு. உலக மீட்பர் பாவிகளின் தன்மை கொண்டிருந்தார் : அவர்களுள் ஒருவராகச் சூசையப்பர் இல்லை. இயேசுவின் தலைமுறைப்பட்டியலில் கடைசிப் படியாகவும் அவர் நின்றாரில்லை. மாறாக மீட்பின் வரலாற்றில் மாமிச இச்சைக்கு இனிப் பணிபுரியாது வாழும் புதிய இனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டு நிற்கின்றார் அவர். விண்ணிலிருந்து வந்த திருமகனின் ஆதரவாளர், காப்பாளர் அவர். இவ் வேலையை விசுவாசத்தோடும் கீழ்ப்படிதலோடும் விண்ணக ஆணைவழியே ஏற்று நிறைவேற்றுகிறார்.

## சூசையப்பரின் வெளிப்படையான கடமை

இரத்த உறவைக் காட்டிலும் மேலான உறவை இயேசுவுடன் சூசையப்பர் கொண்டிருந்தார் என்பதைக் திருமறை நூல் தெளிவாக்குகிறது. அவர் இயேசுவின் தனிவாழ்வில் நுழைகின்றார். இயேசு இவ்வுலகினின்று வராதிருந்தாலும், அவருடைய தந்தை என்ற பாத்திரம் ஏற்றுச் செயலாற்றுகின்றார். அப்போஸ்தலர்களில் தீர்க்க தரிசிகளில் நாம் வேரூன்றி நிற்கிறோம், என்று திருமறை நூல் கூறும்போது, ஆபிரகாமின் பணி நிறைவிசுவாசம் போன்ற அவர்களது விசுவாசத்தில் நம் மீட்பு இருந்தது என்று அது மேலும் சொல்லும்போது நம் மீட்பின் தந்தையரது வரிசையில் புனித நம் மீட்பான திருக்குழந்தையின் அருகேஅவருக்குரித்தான இடத்தில் சேர்க்கப்பட்டுள்ளார் என்பதை நாம் அறிய வேண்டும்.

**எனவே சூசையப்பரின் கடனாற்றலுக்கும், அவரது புனிதத் தன்மைக்குமிடையேயுள்ள உறவை நாம் அறிகின்றோம். சூசையப்பர் கடவுளுடைய அன்னையின் கணவர். இயேசுவின் வளர்ப்புத் தந்தை. அக் காரணத்திற்காகவே அவர் புனித சூசையப்பர். மீட்புத்திட்டத்தில் தமது பங்கை நிறைவேற்ற அழைப்புப் பெறுகிறார் . அதற்கான தூய்மையும் அவரிடமிருந்தது. எனவேதான் திருச்சபையும் அவரைப் புகழ்கின்றது. அத்துடன் நாமும் அவரைப் போற்றுவோம். *****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவாழ்வுக்கு அழைக்கும் தவக்காலம்

ஜெ.எ. அருள்நேசன்

**நினிவே ஒரு மாபெரும் நகர். அதைக் கடக்க மூன்று நாட்கள் ஆகும். யோனா நகருக்குள் சென்று ஒருநாள் முழுவதும் நடந்து சென்றபின், உரத்த குரலில் ''இன்னும் நாற்பது நாளில் நினிவே அழிக்கப்படும்'' என்று அறிவித்தார். (யோனா 3:3-4)**

நினிவே என்கின்ற மாபெரும் நகரம் இறைவனின் கோபத்துக்கு ஆளாகின்றது ஏனெனில் அங்கு வாழ் மக்களின் வாழ்க்கை இறைவனுக்கு வெறுப்பூட்டியது. அந்நகர மக்கள், பாவம் தான் வாழ்வு என அதற்குள் அமிழ்ந்து உழன்றனர். இறைவனின் சினம் நினிவே மக்கள் மீது கவிழ்ந்தது. எனவேதான் ''அவர்கள் செய்யும் தீமை என் முன்னே வந்து குவிகின்றன'' என ஆண்டவர் யோனாவுக்குக் கூறுகின்றார். இருப்பினும் ஆண்டவர் இரக்கமுள்ளவர். எனவே அவர்களை உடனே அழிக்கவில்லை மாறாக அவர்கள் மனம்மாற யோனாவின் மூலம் அழைப்பு விடுக்கின்றார்.

இன்று எமது யாழ். நகரும் நினிவே மாநகரம் போல் மாறிக்கொண்டு வருகின்றதா? எண்ணிப்பார்ப்போம். தற்போது எமது நகரமானது போர்ச்சூழலினால் மையப்படுத்தப்பட்டுக் காணப்படுகின்றது. வழமையிலே ஒரு நாட்டின் மீது போர், வன்முறைகள் திணிக்கப்படும்போது தான் மக்கள் இறைவனை நோக்கிக் கதறி அவரை அண்டிச்செல்வார்கள். ஆனால் நாமோ அதற்குமாறாக இக்காலத்திலே இறைவனை விட்டுத் தூரச் சென்று கொண்டிருக்கிறோம்? ஏனெனில் போரின் அவலங்கள் எம்மேல் பதியாமல் இருக்குமாறு, அதாவது எம் தன்மான சுதந்திர உணர்வு மழுங்கடிக்கப்பட எமக்கு அனைத்து வசதிகளும் தாராளமாகக் கிடைக்கின்றன. ஆபாச சினிமா, கசிப்புற்பத்தி, கொள்ளை மற்றும் பல சமூகச் சீர்கேடுகளின் மத்தியில் அவற்றுடன் இணைந்து நாம் பயணிக்கின்றோம்.

மேலும் நாம் நவ நாகரீகங்கள், ஆடை, அணிகல அலங்காரங்கள் போன்றவற்றுக்கு எம்மை மாற்றுவதாக எண்ணி சாக்கடைகளாக அலைந்து திரிகின்றோம். எம் உடன் பிறப்புகள் தமதுயிரைத் தியாகம் செய்ய, எமது சோதரங்கள் வன்னியிலே பட்டினி கிடக்க நாம்... பலர் மூலமாக இறைவன் எம்மை எச்சரித்தாலும் அவ் எச்சரிப்புகளை எம் நவரச கீதங்களின் நாதத்தால் எம்மால் உணரமுடியாமல் இருக்கின்றது. குருக்களைப் பற்றிய விமர்சிப்புக்கள், இறைவனின் நாவாகத் திகழும் அவர்களின் எச்சரிப்புகளை, அறிவுரைகளை எமது செவிகளிலே படியாமல் செய்துவிடுகின்றன.

**''நினிவே நகர மக்கள் கடவுளின் செய்தியை நம்பி எல்லோரும் நோன்பிருக்க முடிவு செய்தார்கள். பெரியோர் சிறியோர் அனைவரும் சாக்குடை உடுத்திக் கொண்டனர்'' (யோனா. 3:5)**

எனவே மனமாற்றத்தின் காலமாகிய தவக்காலம் எமது மனமாற்றத்தை எதிர்பார்த்து நிற்கின்றது. ''பிழைவிடுவது மனித இயல்பு அதினின்று திருந்துவது தெய்வச் செயல்'' எனவே நாம் மனம் மாறுவோம். எமது கடின உள்ளங்களைக் கிழித்துக் கொள்வோம், ஆண்டவன் பால் எம்முள்ளத்தை உயர்த்துவோம், ''கெட்டுப்போனோம் பாவியானோம்'' எனும் பல்லவி இசைத்து இறைவனிடத்தில் ஊதாரி மகனாக சரணடைவோம், நிச்சயமாக இறைவன் எம்மை மன்னிப்பார்.

மேலும் எமது வளர்ச்சிக்கேற்ப எமக்கும் பொறுப்புக்கள் தரப்பட்டுள்ளன. எமது சமூக வாழ்விலும் குடும்ப வாழ்விலும் ஒளிமுத்துகளாகத் திகழ அழைக்கப்படுகின்றோம். எனவே எம் பொறுப்புக்களை சரிவர நிறைவேற்றுவோம் எமது அயலவனிலே இறைவனைக் கண்டு அவனை அன்பு செய்து வாழ்வோம். இத் தவக்காலத்திலே எம் பாவங்களுக்காக பரிகாரம் புரிவோம், நோன்பிருப்போம் சிறுசிறு ஒறுத்தல் முயற்சிகளில் ஈடுபடுவோம்.

நானும் என் குடும்பமும் என வாழாது என் அயலவர்கட்கு, ஏழைகட்கு,எதிரிகளுக்கு மற்றும் எம் உதவியை நாடுபர்களுக்கு இத் தவக்காலத்தில் உதவி செய்து எம்மைப் பகிர்ந்து வாழ்வோம். இவ்வாறாக நாம் மனம் மாறினால் சமாதானம் எம் உள்ளங்களிலும் நாட்டிலும் விரைவில் மலரும்.

**கடவுள் அவர்கள் செய்ததனைத்தையும் பார்த்தார். அவர்கள் தீய வழியின்று விலகியதை அவர் கண்டு தம் மனதை மாற்றிக்கொண்டார். தாம் அவர்கள் மீது அனுப்புவதாக கூறியிருந்த தண்டனையை அனுப்பவில்லை. (யோனா. 3:10)**

# ஏன் இந்த தபசுகாலம்?

விபூதிப் புதன் எமது தபசுகாலத்தை அல்லது ஒறுத்தல் உபவாசத்தை தொடங்கி வைக்கிறது. அன்றைய தினத் திருப்பலியில் எமது நெற்றியில் சாம்பலை இட்டு குருவானவர் எமக்குச் சொல்லும் வார்த்தை என்னவென்றால், ''மண்ணால் உருவாக்கப்பட்ட மனிதனே, நீ திரும்பவும் மண்ணுக்கே திரும்புவாய்'' என்பதாகும். அன்றோடு எமது பாவங்களுக்கு நாம் பரிகாரம் தேடத் தொடங்குகின்றோம். எவ்வாறெனில் அந்த 40 நாட்களும் தவறாது திருப்பலிக்குச் செல்கின்றோம். எமது ஆடை ஆபரணங்களை எளிமையாக்குகின்றோம். எமது உணவுகளை குறைத்து உண்ணுகின்றோம். மாமிச மச்ச உணவுகளை தவிர்க்கின்றோம். திரைப்படங்கள் பார்ப்பதில்லை. தொலைக்காட்சிகளைப் பார்ப்பதில்லை. இவ்வாறு பலவாறு எமது உடலின் உள்ளத்தின் உணர்வுகளை ஒறுக்கின்றோம். இவை எல்லாம் எதற்காக? இயேசுவின் மரணத்திற்காகவா? அல்லது எமது வாழ்வை நாமே திருத்திக் கொள்வதற்காகவா? சிலர் நினைக்கிறார்கள் தபசுகாலம் ஒரு துன்பத்தின் காலம் என்று. நிச்சயமாக அப்படி அன்று. எமது பாவங்களுக்காக அவர் அனுபவித்த வேதனைகளை எண்ணி அவர் எமக்கு அளித்துள்ள மீட்பிற்கு நன்றி கூறும் முகமாக எம்மையும் அறியாமல் எமக்குள் முளைத்திருக்கும் பாவக் களைகளை பிடுங்கி எறிந்து விடுவதற்காகவே இந்த தபசுகாலம்.

உலகின் ஒளியாம் இயேசுவின் வழிசெல்லும் நாம் ஒவ்வொருவரும் அன்பினை இழந்து, பண்பினை மறந்து, மனிதநேயம் அற்ற மானிடர்களாக இருட்டுப் பாதையிலே, குருட்டு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இருள் சூழ்ந்துள்ள இப் பூவுலகினுள் வாழும் நாம் அன்பிலே மலரவும் அமைதியிலே நிலைக்கவும் அழைக்கப்பட்டவர்களாவோம். திருப்பாடுகளை சிந்திக்க முயலும் இவ் வேளையிலே எம் உள்ளத்தை தூய்மைப்படுத்த வேண்டும்.

திருநீற்றை எம் நெற்றிகளிலே அடையாளமிட்டுக் கொண்ட நாம் உண்மைக் கிறிஸ்தவர்களாக வாழ்வதற்கு சான்று பகர வேண்டும். இறைவார்த்தைக்கு செவிமடுக்காமலும் இறையன்பினில் ஒன்றிக்காமலும் வாழ்கின்றோம். கொலை, கொள்ளை, பொய், களவு, தீயநடத்தை என்பனதான் எம் வாழ்வில் ஒட்டிப்போய் இருக்கின்றன. இவ் வாழ்க்கை எமக்கு எதைத் தான் பெற்றுத் தரப்போகிறது. அன்று நினிவே பட்டணத்து மக்களின் பாவங்கள் கடவுளுக்கு அளவுகடந்த வேதனைகளை கொடுத்ததாலும் அவர் அவர்களை அழிக்கவில்லை. மாறாக அவர்களுக்கு 40நாள் அவகாசம் கொடுத்தார். அவர்கள் மேல் அன்பும் பரிவும் கொண்டு அவர்களை காப்பாற்ற விரும்பினார். அந்த ஊருக்குள் செல்லமாட்டேன் என்று விலகி ஓடிய யோனாவை மீண்டும் வலியுறுத்தி அங்கு போகச் செய்தார். காரணம்! இந்த முறையாவது இவர்கள் என் மக்கள் என் வார்த்தைக்கு செவிமடுத்து தங்கள் பாவ அக்கிரமங்களிலிருந்து விலகி உண்மையான இறையன்புக்கு கீழ்ப்படிய மாட்டார்களா? என்ற ஆவலில்தான். அவரது எதிர்பார்ப்பு பொய்யாகவில்லை. கடவுளின் நீதிக்குப் பயந்து அந்த நாட்டு மன்னன் முதல் கடைசி உயிர் ஜீவராசிகள் வரை உடனே தங்கள் உடைகளைக் கிழித்துக்கொண்டு கோணி உடுத்தி, சாம்பலில் உட்கார்ந்து, உண்ணாது, குடியாது, உறங்காது நோன்பிருந்தார்கள். இதனால் மனமுருகிய இறைவன் அவர்கள் மீது மனமிரங்கி அவர்களை அழிக்காது விட்டுவிட்டார் என்று இறைவார்த்தையில் காண்கின்றோம். ஆனால், இயேசு கல்வாரியில் சிந்திய இரத்தத்தினால் எங்கள் ஒவ்வொருவரது பாவங்களையும் கழுவிவிட்டார். எமக்குப் மீட்பினைப் பெற்றுத்தந்தார். அவரை விசுவசிக்கும் யாவருமே இனி அழிந்துபோவதில்லை. ஆயினும் பற்பல வேளைகளில் நாம் இறைவனுக்குப் புறம்பான காரியங்களை எவ்வளவோ புரிகின்றோம். எமது அயலவர்களால் அவை சுட்டிக்காட்டப்பட்டாலும் ஏற்கமறுக்கின்றோம். மற்றவர்கள் தவறிளை தயக்கமின்றி கூறிக்காட்டும் எம்மால் எம் குற்றங்களை ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. இவற்றிற்காகவே நாம் ஒறுத்தல் இருக்கின்றோம். மது அருந்துவதைத் தவிர்க்கின்றோம். தெளிவான மனநிலையில் இருக்கின்றோம். புகைத்தலைத் தவிர்க்கின்றோம். சிந்தையை ஒருநிலைப்படுத்துகின்றோம். தீய நாட்டங்களை தவிர்க்கின்றோம். உள்ளம் தெளிவாக இருக்கின்றது. உணவை ஒறுக்கின்றோம். உடல் பாரமின்றி வெறுமையாய் இருக்கின்றது. உடையலங்காரங்களைக் குறைக்கின்றோம். பார்வை பசுமையாகின்றது. தவறாது ஆலயம் செல்கின்றோம். இறைவார்த்தையும் உடலும், இரத்தமும் எம்மை நிறைவுக்குள்ளாக்குகின்றது.

இப்படியாக நாம் உலகின் பளுவின்றி இறைவனோடு ஒன்றித்து இந்தத் தவக்காலத்தில் எம் உள்ளத்தை கிழித்து அவற்றிலிருக்கும் எமது அசுத்தங்களை வெளியேற்றுவோம். இயேசுவின் பாடுகளினால் அவர் சிந்திய குருதிகளால் மீண்டும் எம் உள்ளத்தை கழுவுவோம். தூய்மையாக்குவோம். மீண்டும் அதே தவறுகளை செய்யாதிருக்க தேற்றரவாளனின் கொடைகளால் எம்மை நிரப்புவோம். இயேசுவின் மலைப்பொழிவினை என்றென்றும் நினைவில் கொள்வோம். அதன் வழியாக வாழ முயல்வோம். உடலையும் உயிரையும் எமக்காகவே அழித்தார் இயேசு. அவர் செப்பனிட்டுச் சென்ற பாதையில் செழிப்புற வாழ்ந்திட எமக்களிக்கப்பட்ட தபசுகாலத்தை எம் வாழ்வாக்குவோம்.

செம்பியன்மைந்தன்
நிர்மலராஜ்

# தவக்காலத்தின் அர்த்தம் காண்போமா?

கல்லான இதயத்தை எடுத்துவிடு – எம்மைக்
கனிவுள்ள நெஞ்சுடனே வாழவிடு.

பொன்னான காலம், பொருள் நிறைந்த காலம், அருளைச் சொரியும் காலம், ஆண்டவனை அடையும் காலம், இதுதான் தவக்காலம் – இறைவன் படைப்புக்கள் ஒவ்வொன்றும் உளமாற்றம் பெற ஏற்ற காலம்..

ஆண்டாண்டு தோறும், எம்மைக் கடந்து செல்லும் இத் தவக்காலமானது. எமது வாழ்விலே ஏதாவதொரு சிறிய உளமாற்றத்தை ஏற்படுத்தாவிடில் இத்தவக்காலத்தின் அர்த்தம் தான் என்ன? காலத்துக்குக் காலம் மாறிமாறி திரையிலே ஓடிக்கொண்டிருக்கும் திரைப்படங்கள் போன்று இக்காலம் அமைந்து விடுமாயின் இத் தவக்காலம் ஓர் பொருள்மிக்க காலமென்று நாம் கூறிவிடமுடியுமா?

திருநீற்றுப் புதனுடன் ஆரம்பித்த இத்தவக்காலம் கிறிஸ்து பெருமானின் உயிர்ப்புடன் முடிவடைகின்றது. இந்த நாற்பது நாட்களுக்குள்ளும், நாம் செப,தப, தானதரும முயற்சிகளில் மும்முரமாக ஈடுபட்டு விட்டு [illegible] மீண்டும், ''பழைய குருடி கதவைத் திறவடி'' என்ற நிலைக்குத் [illegible] இதில் என்ன அர்த்தம் உண்டு?

உங்கள் உடைகளையல்ல உள்ளங்களைக் கிழித்துக் கொள்ளுங்கள் என்ற இறைவார்த்தைகள், பரிசேயரின் வெளிவேடம் நிறைந்த போலி வாழ்க்கையை வெறுத்து – உண்மை உள்ளத்துடன், திருந்திய மனிதனாக, இறைவனிடம் திரும்பி வந்த மனிதனாக வாழ எம்மை அழைத்து நிற்கின்றது. எம் வாழ்நாளில் ஒவ்வோர் ஆண்டும் நாம் உளமாற்றம் பெற்ற வாழ்வு வாழவே அழைக்கப்பட்டுள்ளோம்.

எனவே, மனிதனும் புனிதனாகலாம்: இறைவன் எம் ஒவ்வொருவருக்கும் அளித்த மாபெரும் சந்தர்ப்பம் இது. இக்காலத்தைப் பயனுள்ள வகையிலே கழித்திடுவோம்– இறைவன் எம்மைச் சந்திக்கும் புனித காலமே என அர்த்தத்துடன் ஆலயத்தில் பாடிடுவோம். எம்முடன் இரண்டறக் கலந்துள்ள பாவப் பளுக்கள், பாவ நாட்டங்கள் அனைத்திலிருந்தும் விடுபட முயற்சி செய்வோம்: அலகையின் சூழ்ச்சிக்குள் அகப்படாது ஜெயிக்கச் செபம் செய்வோம் எமது ஐம்புலன்கள், ஆசாபாசங்களைக் கட்டுப்படுத்தி ஆண்டவன் வழிசெல்ல முன்வருவோம். இத்தவக்காலத்தின் மேன்மையையும், மகத்துவத்தையும் உணர்ந்து நல்ல நிலத்தின் விதைகளாக வாழ முற்படுவோம்

தவம் குருசுமுத்து, நவாலி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ். புனித மரியாள் பேராலயம்

### ஆயர் தலைமையில் புனித வாரச் சடங்குகள் 2001

**2001-04-08 குருத்தோலை ஞாயிறு**

காலை 6.30 – முதல் திருப்பலி
காலை 8.30 – இரண்டாம் திருப்பலி
மாலை 5.15 – மூன்றாம் திருப்பலி

**2001-04-09 திங்கள்**

மாலை 5.00 – குருக்கள் வாக்குறுதி புதுப்பித்தலும் தைலங்கள் மந்திரிக்கும் சடங்கும் – திருப்பலியும்

**2001-04-12 புனித வியாழன்**

மாலை 5.00 – இறுதி உணவு ஞாபகர்த்த திருப்பலியும் நற்கருணை ஆரானையும் 97மணி தொடக்கம் 8மணி வரை பொது ஆராதனை)

**2001-04-13 புனித வெள்ளி**

காலை 6.30 – திருச்சிலுவைப் பாதை தியானம் பேராலய வெளியரங்கில்

மாலை 4.30 – திருச்சிலுவை ஆராதனையும் நற்கருணை பந்தியும்

**2001-04-14 புனித சனி**

காலை 6.30 – தியானம் இயேசு திருச்சிலுவையில் மொழிந்த வாக்கியங்களில்

மாலை 6.00 –பாஸ்கா திருவிழிப்பு ஆராதனையும் திருப்பலியும்

**2001-04-15 பாஸ்கா ஞாயிறு**

காலை 6.30 – முதல் திருப்பலி
காலை 8.30 – இரண்டாம் திருப்பலி
காலை 9.30 – மூன்றாம் திருப்பலி
மாலை திருப்பலி இடம்பெறமாட்டாது.

*பங்குத்தந்தை,*
*யாழ். பேராலயம்.*

## இறையரசிற்கு இட்டுச்செல்வது தியாகத்தோடிணைந்த அன்பின் பயணமே

புதிய மிலேனியத்தின் முதலாவது தவக் காலத்தை அனுஸ்டித்துக் கொண்டிருக்கிறோம். தவக்காலம் என்பது வருடாவருடம் வந்து போகும் சமய சம்பிரதாய நிகழ்வு என்பதை விடுத்து எமது உள்ளத்தின் ஆழத்தில் உதிக்கும் உண்மையான மனமாற்றத்தின், புதுப்பிறப்பின் காலமாக அமையவேண்டும்.

இந் நாட்கள் இயேசுவின் பாடுகளையும் திருச்சிலுவையையும் எமக்கு நினைவூட்டி நிற்கிறது. தவக்காலம் பாடுகளைத் தியானித்து நோன்பு நோற்கும் காலம் என்பதைவிட யேசு உயிர்த்து நம்மிடையே வருவார். அவரது வருகைக்காக எம்மைச் சிறப்பான முறையில் தயார்ப்படுத்துவதற்குரிய காலம் என்பதை எமது நினைவில் கொள்ளவேண்டும்.

அவமானத்தின் சின்னமாக கருதப்பட்ட சிலுவை, மரம் கிறிஸ்துவின் மரணத்தால் அதி உன்னத மீட்பின் திருச்சிலுவையாய் உயா வடைந்தது. யேசுவின் திருச்சிலுவையைக் கண்டு வெட்கப்படாது திருச்சிலுவை அடையாளத்தை உண்ணும்போதும் உறங்கும் போதும் மட்டுமல்ல எழுந்து, பேசி, பயணிக்கும் போதும் வரைய வேண்டும். தவக்காலத்தில் அடியெடுத்து செல்லும் நாம் தினமும் சில நிமிடமாவது இதைப் பற்றித் தியானிப்போம்.

*''கிறிஸ்துவிடம் நம்பிக்கை கொள்வதற்கு மட்டுமல்ல அவருக்காகத் துன்பங்களை ஏற்பதற்கும் நீங்கள் அருள் பெற்றுள்ளீர்கள்''* (பிலிப்பியர். 1:29) நமது ஆன்மீக வளர்ச்சிக்கும் அடிப்படையாக இத் திருவசனம் அமைந்திட வேண்டும். கிறிஸ்துவில் நாம் வைத்துள்ள நம்பிக்கையின் வளர்ச்சி முழுமை பெறுவது அவருக்காகத் துன்பங்களை ஏற்றுக்கொள்ளும் போதுதான். வேறு கோணத்தில் சிந்தித்தால் நம்பிக்கை வளர வளரத் துன்பங்களும் அதிக மாகும். ஆனால் நாம் துன்ப துயரங்களில் இறையருளைக் காண்பதில்லை, மாறாக சோர்ந்து துவண்டு வேண்டா வெறுப்போடு ஏற்றுக் கொள்கிறோம். இறையரசை அடையும் பாதை மிகவும் ஒடுக்கமானது என்பதை உணரத் தவறி விடுகின்றோம். துன்பங்களின் வழியாகத்தான் இன்பமயமான இறைபதத்தை அடைய முடியும்.

சிலுவை மரணம்தான் உயிர்ப்பிற்கான அடிப்படை என்பதைக் கிறிஸ்தவர்களாகிய நாம் புரிந்துகொள்ள வேண்டும். சில நோய்கள் நாம் எவ்வளவு செபித்தாலும் குணமாவதில்லை. அது ஒருவேளை நாம் துன்பங்களை ஏற்று நிறைஅருள் பெற்றிடக் காரணமாக அமையலாம். நோயிலும், நாளாந்த வாழ்விலும் வரும் துன்பங்கள் அனைத்தும் அருளின் அடிப்படையே என்று ஏற்று வாழ வேண்டும். இதை எமக்கு உணர்த்தவே இறைமகனான இயேசு மனுவுரு எடுத்து மண்ணகம் வந்து துன்பகரப் பாடுகள் ஏற்று எமக்காகப் பலியானார்.

எஸ் யேசுதாஸ்,
கொழும்புத்துறை

## செபமாலைக் கன்னியர் சபை
### (Rosarians)

மகளே!

நிலையில்லாத இவ்வுலக வாழ்வில் நிலைத்திருப்பவராகிய இறைவன் ஒருவரையே ஆவலாகத் தேடி அவரை அனுபவிக்க விரும்புகிறாயா?

மண்ணுக்காய்ப் போராட்டம் நிகழும் காலக்கட்டத்தில் உன் சொந்த மண்ணை மீட்க நீ ஏந்த வேண்டிய முதல் தர ஆயதம் செபமாலையே என்றுணர்ந்து,மரியன்னையை தலைவியாகக் கொண்டு செபமாலையைக் கரத்தில் ஏந்தி தீமைக்கெதிராகப் போராட்டத்தில் குதித்து மக்களைக் காக்க விரும்புகின்றாயா?

உலகம் முழுவதையும் உன் உள் மனதில் ஏந்தி, தொடர்பாக நற்கருணைப் பிரசன்னத்தில் ஆண்டவர் இயேசுவோடு இணைந்து முழு உலகிற்காகவும் பரிந்துரைத்து அபரிதமான இறையருள் உலகிற்கு பெற்றுக் கொடுக்க ஆசிக்கின்றாயா?

நசரேத்தில் யேசுவின் தாழ்மை, எளிமை, மௌனம், தியானம் அடங்கிய முப்பது வருட மறைந்த வாழ்வை மீண்டும் இவ்வுலகில் தொடர்ந்து வாழ்ந்து மீட்புப் பணிக்கு உன் பங்களிப்பை நல்க விரும்புகிறாயா?

இத்தகைய ஆழ்ந்த இறையனுபவ வாழ்வுக்கு தூய ஆவியானவர் உம்மைத் தூண்டுகிறாரா?

இளம் பெண்ணே! விழித்தெழு! செபமாலைக்கன்னியர் சபை உன்னை அழைக்கிறது.

**தகைமை: O/L வரையாவது படித்திருக்க வேண்டும்.**
**செபமாலைக் கன்னியர் தொடர்பு** *கொள்ளவேண்டிய முகவரி*
**123, பிரதான வீதி**
**யாழ்ப்பாணம்.**

**செபமாலைக் கன்னியர் மடம்**
**அமலிவனம்**
**அச்சுவேலி**

## ஹினிதும யாத்திரைத்தலம் 52 ஆண்டுகள் பூர்த்தி

முழு இலங்கை வாழ் மக்களினதும் வணக்கத்துக்குரிய யாத்திரைத் தலமாக ''ஹினிதும'' கல்வாரி யாத்திரைத் தலம் மாறி வருகின்றது. 2001ம் ஆண்டின் ஆரம்பத்துடன் இந்த இடம் யாத்திரைத் தலமாக்கப்பட்டு 52 ஆண்டுகள் நிறைவாகின்றன.

இக்கல்வாரித் தலத்தைப் பற்றிக் கூறும்போது எமது நினைவிற்கு வருபவர் இத்தலம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்த சிறில் எதிரிசிங்க அடிகளாரே. இவர் இந்த ஹினிதும வாழ் மக்களுக்கு மட்டுமல்லாது, முழு இலங்கையில் வாழும் கத்தோலிக்கருக்குமே சிறந்த பொக்கிசமாக வழங்கிய கல்வாரித் திருத்தலம் இதுவாகும்.

கல்வாரி யாத்திரைத் தலம் அமைக்கும் நட வடிக்கை 1949ம் ஆண்டில், சிறியதொரு ஒற்றை யடிப் பாதையுடனும் நாட்டப்பட்ட பலகைகளாலான 14 சிலுவைகளுடனும் ஆரம்பமானது. சில காலத்தில் அந்த பலகைகளாலான சிலுவைகள் நடப்பட்டிருந்த இடங்களில் கொன்கிரீட் தூண் கள் நான்கின் மீது 2X3 1/2 அடி அளவில் சிறிய தூண்கள் நடப்பட்டு அதில் தற்போது ஆலயத்தில் தொங்கவிடப்பட்டிருக்கும் சிறு சதுர சட்டத்தி னாலான படங்கள் மாட்டப்பட்டிருந்தது. குரு வானவருக்கு மனித உயரத்திற்கு உருவங்களைச் செய்து அவற்றை 14 ஸ்தலங்களுக்கும் பொருத்தும் ஆவல் இருந்தாலும் அவற்றை நிர்மாணிக்கக் கூடிய ஒருவரைத் தேடிக்கொள்வதற்கு சிரமமாயிருந்தது.

ஆயினும் யட்டலமத்த எனுமிடத்தில் வாழ்ந்த ஜீ. சோமதாச எனும் ஓவியர் ஒருவரை அழைப்பித்து, அவ்வாறான உருவச் சிலைகளைச் செய்து தர முடியுமா எனக்கேட்டுள்ளார். ஆனாலும் அந்த ஓவியர் பௌத்த மதத்தினராய் இருந்ததால் சிறிது பின்தங்கியுள்ளார். எனினும் விரும்பியும் விரும்பாமலும் தனது பணியைத் தொடங்கினார். முதன் முதலில் 8ம் ஸ்தலமான இயேசு எருசலேம் பெண்களுக்கு ஆறுதல் அளிக்கும் நிலையே நிர்மாணிக்கப்பட்டது.

12ம் ஸ்தலத்தில் காணப்படும் ஆலயம் ஆரம்பத்தில் சிறியதொரு குடிலாயிருந்தது. அதன் கூரை தென்னம் ஓரைகளால் வேயப் பட்டிருந்தது. பின்னர் சிறிது சிறிதாக தற்போது காணப்படும் நிலைக்குக் கொண்டு வரப்பட்டது. பூங்காவனம் முதல் 12ம் ஸ்தலம் வரை சிறியதொரு ஒற்றையடிப்பாதையே அன்று காணப்பட்டாலும் சிரமதானங்களினாலும் விசேடவிதமாக பங்கு மக்களின் உழைப்பாலும் இன்று இந்த நிலைக்கு முன்னேறியுள்ளது.

பௌத்தர்கள் அதிகமாக வாழும் இக் கிராமத்தில் இக் கல்வாரி யாத்திரைத் தலம் நிர் மாணிக்கப்பட்டிருப்பது இறைவனின் செயலே. பல பிரச்சினைகள் மத்தியில் கடந்த 52வருடங்களாக வழிநடாத்திவருகின்ற இறைவனுக்கு நன்றிகூற அனைவரும் கடமைப்பட்டவர்களே.

## மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய

### காணி விஸ்தரிப்பு காணிக்கை

**12.03.2001 வரை சேர்ந்த தொகை 105,380 ரூபா.**

**மேற்படி திருத்தலப் பணிக்கு பணம் சேர்க்க யாருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. தயவுசெய்து மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் பணத்தை வழங்கும் போது பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள மறக்கவேண்டாம்.**

அருள்திரு ஏ.எவ். பெனற்
பரிபாலகர்,
புனித அந்தோனியார் ஆலயம்.
மானிப்பாய்.

## திருக்குடும்ப துணைஅங்கத்தவர்களின் அர்ப்பணமும் 3ம்படி நிலை உயர்வும்

இன்று நல்ல பிதா பீற்றர் பியன்வெனு நோ ஆய குடும்பம் இணைந்து மகிழந்த இந்த நல்ல நாள். திருக்குடும்ப சபையின் பல கிளைகளும் ஒரு ஊற்றில் வளர்ந்து வருவதை அனுபவித்த ஓர் இன்ப நாள். 28ம் நாள் நாகொட என்னும் இடத்தில் உள்ள தியான யோகக் கன்னியர் மட வளாகத்தில் அப்போஸ்தலிக்க துறவிகள், தியான யோகச் சபைச் சகோதரிகள் திருக்குடும்ப சபைக் குருவானவர் பொதுநிலைத் துணை அங்கத்த வர்கள் அனைவரும் கலந்து உறவு கொண்ட இனிய நாள்.

பம்பலப்பிட்டியையும் கொட்டாஞ்சேனையையும் சேர்ந்த திரு ஆ. லீனஸ் அவர்கள் ஊக்கு விப்பாளர் அருள்சகோதரி பிறிசில்லா, முன்னாள் ஊக்குவிப்பாளர் அருள்சகோதரி தெரசியா அவர்களும் இணைந்து தியான யோகச் சபைக் கன்னியர் மடத்தில் ஒன்றுகூடினர்.

திருப்பலியின் போது, ஒழுங்குகளுக்கு அமைவாக 15 அங்கத்தவர் 3ம்படி நிலைக்கு உயர்த்தப்பட்டனர். 4 சகோதரிகள் அர்ப்பண வாக்குறுதி எடுத்துக் கொண்டனர். திருப்பலியின் போது தேவராஜா அடிகள் ''இறைவன் எம்மை அழைத்தார். அதன்னால் இன்று நாம் எம்மை அர்ப்பணம் செய்துகொண்டோம். அர்ப்பண வாழ்வு இறைவார்த்தையை அனுபவ மாக்கி வாழும் வாழ்வாக வேண்டும்'' என்றார்.

திருக்குடும் பொது துணை அங்கத்தவர் சபைத் தலைவி திருமதி பூபதி சூசைமரியதாசன அவர்கள் தமதுரையில் இறைவனின் திட்டம் கொழும்பு நகரில் நிறைவேறிய பாங்கினை நன்றியுடன் நினைவு கூர்ந்தார். மேலும் அர்ப்பண நிகழ்வுக்கான ஒழுங்குகளை ஆயத்தம் செய்து, வழிநடத்திய ஒவ்வொருவருக்கும் தியானயோகச் சகோதரிகளுக்கும் நன்றி கூறினார்.

அர்ப்பண நிகழ்வுக்கான ஆயத்தங்களை அருள்சகோதரி பிறிசில்லா அவர்களுடன் இணைந்து செயலர் திருமதி றெஜினா மரியநாயகம் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்.

S.S. மரியதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மக்களுக்கு தென்பகுதி வாழ் மக்களின் அன்பளிப்பு

பலாலி யாழ். சேவையில் கத்தோலிக்க நற்சிந்தனைகளை தம் சொந்தக் குரலில் வழங்க விரும்பும் குருக்கள், கன்னியர், பொது நிலையினர் கவனத்திற்கு... (பக்கம் 2 பார்க்கவும்)



யாழ். குடாநாட்டில் மருத் துவ வசதியின்றி துன்புறும் மக்களுக்கு தென்பகுதி சிங்கள மக்கள் சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரங்களை அன்பளிப்பு செய்துள்ளனர். இன்றைய காலகட்டத்தில் இவர்களின் இந்த அன்பளிப்பு முக்கியம் வாய்ந்த ஓர் நல்லெண்ண நடவடிக்கையாக அமைகிறதென யாழ். ஆயர் காவலனுக்குக் கருத்துத் தெரிவித் தார்.

பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையை தென்பகுதி அரிமா சங்கத்தின் தலைவர்களும் பிரதிநிதிகளும் கொழும்பில் சந்தித்தனர். மேற்படி சந்திப்பின்போது சுமார் 80 இலட்சம் ரூபா பெறுமதிவாய்ந்த 4 சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரங்களை யாழ்ப்பாண மக்களுக்கு வழங்கும்படி அன்பளிப்பு செய்தனர்.

யாழ். ஆயர் தமிழ் மக்கள பெயரால் அவர்களின் இந்த நல்லெண்ண நடவடிக்கைக்கு தம்முடைய பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்தார். பேச்சுவார்த்தைகளுக்கான ஒழுங்குகள் நடைபெறுகின்ற இவ் வேளையில் இருபகுதி வாழ் மக்களுக்குமிடையில் ஒரு உறவினை ஏற்படுத்த இது ஒரு நல்ல நிகழ்வாகும் என்றார்.

தாம் பெற்றுக்கொண்ட இந்த சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரங்களை யாழ். நகரில் வைத்தியப் பணிபுரியும் திருச்சிலுவைக் கன்னியர்களிடம் ஒப்படைத்து யாழ். மக்களுக்காக அவற்றைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

## கிளி.-முல்லை. மறைக்கோட்டத்தில் மடுஅன்னையின் சமாதானப் பவனி

மருதமடு அன்னையின் திருசொரூபப் பவனி ஏப்ரல் மாதம் 2ம் திகதி முதல் கிளி.-முல்லை. மறைக்கோட்டத்தில் 4நாட்கள் நடைபெறவுள்ளது.

மடுவிலிருந்து பல்லவராயன் கட்டு மல்லாவி, புதுக்குடியிருப்பு, வட்டக்கச்சி, இராமநாதபுரம், அக்கராயன், ஆகிய இடங்கள் வழியாக மீண்டும் மடுப்பதியினை மடு அன்னையின் திருசொரூபம் சென்றடையும். இந் நிகழ்விற்கு கிளி.-முல்லை. மறைக்கோட்ட முதல்வர் தேவசகாயம் அடிகள் தலைமையில் சந்திரபோஸ் அடிகளும் ஏனைய குருக்களும் இணைந்து ஒழுங்குகளை மேற்கொள்ளவுள்ளனர்.

## மானிப்பாய் புனித அந்தோனியார் பக்தர்களுக்கு ஒரு விசேட செய்தி

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரால் உருவாக்கப்பட்ட இறுதியான வரலாற்றுப் புகழ்மிக்க மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத் தலத்தின் முன்றலை விஸ்தீகரிக்கும் திட்டமொன்றினை பரிபாலகர் ஏ.எவ். பெனற் அடிகளார் யாழ். ஆயரின் அனுமதியுடன் மேற்கொண்டு வருகிறார்.

ஆலயத்திற்கு இடப்புறமாகவுள்ள காணியைக் கொள்வனவு செய்யும் இத் திட்டத்திற்கு தாராள மனம்கொண்ட அந்தோனியார் பக்தர்களிடம் நிதியுதவியினை அவர் கோரியுள்ளார்.

நிதியுதவியினை வழங்க விரும்பும் பக்தர்கள் வர்த்தக வங்கியின் யாழ்ப்பாணக் கிளையின் கணக்கு இல. 31211 என்ற முகவரியிலோ அல்லது பரிபாலகர் புனித அந்தோனியார் ஆலயம் மானிப் பாய் என்ற முகவரியிலோ வழங்க முடியும்.

### வன்னிக்கான...

*(1ம் பக்கத் தொடர்ச்சி..)*

சொல்லொணாத் துன்பங்களை வருவித்துள்ளது. இந்த நடவடிக்கையானது மக்களை அரசாங்கத்தை வெறுத்து புலிகளையே நாட செய்துள்ளது.

விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமாக இரண்டு தடவைகள் யுத்த நிறுத்த அறிவிப்பை செய்து தம் நல்லெண்ணத்தைக் காட்டி பேச்சு வார்த்தைக்கு முன்வருவதாக அறிவித்துள்ள இந்த முக்கியம் வாய்ந்த நேரத்தில் கடந்த பல வருடங்களாக வன்னி மக்களை வாட்டி வரும் இந்தப் பொருளாதாரத் தடையை அரசும் தம் நல் லெண்ண நடவடிக்கையை காட்டும் முகமாக நீக்கவேண்டும் என மனிதாபிமானத்தின் பெயராலும் சமாதானத்தின் பெயராலும் வேண்டுகோள் விடுக்கிறேன். தயவுசெய்து பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கு வன்னி மக்கள் மீது விதிக்கப்பட்டுள்ள பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் வழங்கும் பொருட்கள் தவிர்ந்த மற்ற அனைத்துப் பொருட்களையும் அனுமதிக்குமாறும் பொருட்கள் தாரளமாக அங்கு செல்ல வழிவகுக்குமாறும் அறிவியுங்கள்.

தங்களுடைய இந்த செயலானது தமிழ் மக்கள் மீது புரிந்துணர்வையும் கரிசனையும் காட்டும் ஒரு நல்லெண்ண நடவடிக்கையாக நீண்ட தூரம் செல்லும்.

இந்த மண்ணில் அமைதியைக் கொண்டுவர நேர்மையாக தங்களால் எடுக்கப்படும் எல்லா முயற்சிகளுக்கும் எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம் என்று கூறி ஆயர் தம் கடிதத்தை நிறைவு செய்துள்ளார்.

### யுத்தத்தை ...

*( முதலாம் பக்க தொடர்ச்சி...)*

கள். தென்மராட்சியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையால் அந் நகரமே அழிந்து விட்டது. இந் நிலைமை எல்லாவற்றையும் கவனத்திற் கொண்டு இப்போது நிலவும் அமைதியான சூழல் தொடர்ந்தும் நீடிக்க ஆவண செய்ய வேண்டுமென யாழ். மக்கள் சார்பாக அவர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார்.

### அன்னாள் முன்பள்ளி

இடப்பெயர்வுகளால் மூடப்பட்டிருந்த பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலய முன் பள்ளி இம்மாதம் 7ம் திகதி தொடக்கம் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

## வடபகுதி திருச்சபை சமாதான முயற்சிக்கு தன் முழு ஒத்துழைப்பையும் வழங்கும்

இலங்கை ஜனாதிபதிக்கு ஏழு அம்சக் கோரிக்கை ஒன்றினை விடுத்து எழுதிய மடலிலேயே யாழ். ஆயர் மேற்கண்ட பாக்குறுதியை வழங்கியுள்ளார்.

இன்றைய நிலை பற்றிய தவறான எண்ணக்கருக்களை மனதிலே கொண்டுள்ள மிக சிலரே போர் தொடர வேண்டும் என விரும்புகின்றனர். தாங்களும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென வலியுறுத்தி வந்துள்ளீர்கள்.

யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தைக் கொண்டு வருவேன் என வாக்குறுதி அளித்தமையினாலேயே மக்கள் தங்களுக்கு வாக்களித்தார்கள். தாங்கள் அரசியலமைப்பை யாத்துக்கொண்டிருப்பதில் அதிக நேரத்தை செலவழித்த வேளை விடுதலைப் புலிகளை அழிப்பதற்கும் தமிழ் மக்களிடமிருந்து தனிமைப்படுத்துவதற்கும் கட்டவிழ்த்து விடப்பட்ட கொடிய போரானது தமிழ் மக்களை வெகுவாகத் தாக்கியுள்ளது. யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஜனாதிபதிக்கு விடுத்துள்ள ஏழு கோரிக்கைகளும் இவை.

1. நோர்வே நாட்டு விசேடதுதுவருடன் என்ன தடை வந்தாலும் சமாதானத்துக்கான முன் முயற்சிகளை இடைவிடாது தொடரவும்.

2. நீதியான ஒரு தீர்வினை அடைய தென்பகுதி வாழ் மக்கள் மத்தியில் ஒரு சமூக மனநிலை உருவாக்கப்பட வேண்டும். இனப் பிரச்சினையை ஒரு தேசிய நிகழ்வாக முதன் மைப்படுத்தி நாட்டின் கட்சி அரசியலிலிருந்து அதனைப் பிரித்துப் பார்க்கும் நிலையை உருவாக்கவும்.

3. தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையின் மூலம் சமாதானத்துக்கான தமது உறுதியான முடிவை தமது ஒருதலைப் பட்சயுத்த நிறுத்தம் மூலம் வெளிப்படுத்தியுள்ளது. அரசு அதற்குப் பதிலாக யுத்த நிறுத்தம் ஒன்றினை அறிவிக்காவிட்டாலும் இராணுவ நடவடிக்கைகளை தவிர்ப்பதன் மூலமாவது தம் நல்லெண்ணத்தை வெளிக் கொணர வேண்டும். வன்னிக்கும் மற்றைய இடங்களுக்குமான பொருளாதாரத்தடைஅகற்றப்படவேண்டும்.

4. நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் தோற்றுவிக்கும் முகமாக தென்பகுதியிலிருந்து அநேக குழுக்கள் வடக்கு-கிழக்கு பிரதேசம் வாழ் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேச வாழ் மக்களையும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் சந்திக்க அனுமதிக்க வேண்டும்.

5. மடுப்பதி இலங்கைவாழ் மக்கள் அனைவருக்கும் ஒரு புனித பிரதேசமாகவும் சமாதான முயற்சிகளின் சந்திப்பின் இடமாகவும் அமைகின்றதனால் அப்பிரதேசத்தினை சமாதான பிரதேசமாகவோ நடுநிலைமைப் பிரதேசமாகவோ ஆக்க வேண்டும்.

6. சமாதான முயற்சிகளை கண்காணிக்க உள்நாட்டு, வெளிநாட்டு, நடுநிலைமை கண்காணிப்பாளர்கள் குழுக்கள் உருவாக்கப்பட வேண்டும்.

7. விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையைமேற் கொள்ள யாழ்ப்பாண ஆனையிறவு A9 வீதியினை திறந்து விடவும். இப்பாதையினை ICRCம் UNHCRம் மேற்பார்வை செய்யலாம்.

## ஏப்ரல் 6,7,8ம் திகதிகளில் காவிய நாயகன்

### திருமறைக் கலாமன்றத்தின் திருப்பாடுகளின் காட்சி

யாழ். திருமறைக்கலாமன்றத்தால் வருடந்தோறும் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பைச் சித்தரிக்கும் திருப்பாடுகளின் காட்சி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6ம், 7ம், 8ம் திகதிகளில் மாலை 6.15மணிக்கு மன்ற அரங்கில் நடைபெறவுள்ளன.

இம்முறை "காவிய நாயகன்" என்ற பெயரில் மேடையேற்றப்படவுள்ள திருப்பாடுகளின் காட்சியின் பிரதியை திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ. மரிய சேவியர் அடிகளார் எழுதி நெறியாள்கை செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

***

### புனிதவளன் கத்தோலிக்க அச்சக திருவிழா

அச்சகப் பாதுகாவலர் புனிதர் சூசையப்பரின் பெருவிழாவை முன்னிட்டு வளன் கத்தோலிக்க அச்சகப் பணியாளர்கள் சாட்டிக்கு சுற்றுலா ஒன்றை (19.03.2001 அன்று திங்கட்கிழமை) மேற்கொண்டுள்ளனர்.

## இடையூறுகளை சவால்களாக கருதாதீர்கள்!

### செடேக் நிறுவன இயக்குனர் ஜே.பி. தேவராஜா அடிகள்

அண்மையில் யாழ். நகருக்கு விஜயம் செய்த செடேக் நிறுவன இயக்குனர் ஜே.பி. தேவராஜா அடிகள் தம் சகோதர நிறுவனமான கியூடெக் நிறுவன ஊக்குவிப்பாளர்கள் மத்தியில் பேசும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊக்குவிப்பாளர்கள் உங்களைப் பார்க்கின்றபோது பெரும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. உங்கள் பணிக்கு இடையூறாக இருக்கும் எந்த வேலையையும் சவாலாகக் கருதாமல் சமூகத்தின் மட்டிலான கடமையாகக் கருதி சலிப்ப[illegible] வேண்டும். உயர்வான பெருமை கொள்ளக்கூடிய விழிப்புணர்வுப் பணி உண்மையில் ஒரு சமூக வழிகாட்டிகளின் பணிக்கு சமனானது. இதற்கான பலா பலன்களையும் உடன்காண முடியாததலால் சலிப்படையாது செயற்படுங்கள். சமூக மாற்றத்தில் விழிப்படையும் நல்ல மக்களால்தான் நல்ல நம்பிக்கையுள்ள சமூகத்தை கட்டி எழுப்பலாம். மனித வாழ்வின் புனிதத்தை உணர்த்துவதில் சமய விழுமியங்கள் நல்லதையே வெளிப்படுத்துகின்றன. அவ் விழுமியங்கள்வாழப்பட வேண்டும். இன்றைய காலத்தின் தேவை கருதி நீங்கள் ஆற்றும் பணிக்கும் இறையருளும் ஆசீரும் என்றும் உங்களுக்கு துணை நிற்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பல நெருக்கீடுகளை எதிர்கொள்ளும் மக்களின் துயர் துடைப்புப் பணிகளில் பலதரப்பட்ட சமூக அமைப்புக்களும், பல்கலை மாணவர்களும் ஒன்றிணைந்து சமூக விழிப்புணர்வுக்குக் கூட்டு முயற்சியாக செயற்படுவது ஊக்குவிப்பாளர் பணிக்கு பக்கபலமாக உள்ளது என்று தெரிவித்த மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குனர் ஜெயக்குமார் அடிகள் செடெக் நிறுவன இயக்குனர் J.B. தேவராஜா அடிகளாரின் உறுதியூட்டு வார்த்தைகளுக்கு நன்றி தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org